# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

அக்டோபர் 2003 ஜீவியம் 9 மலர் 6

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் V | 2 |
| இம்மாதச் செய்தி | 5 |
| லைப் டிவைன் | 6 |
| எங்கள் குடும்பம் | 12 |
| அஜெண்டா | 34 |
| அன்பர் கடிதம் | 36 |
| காரிய சித்தி | 40 |
| சாவித்ரி | 47 |
| இதுவோ உம் ரௌத்திரக் கருணை | 49 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 56 |
| லைப் டிவைன் - கருத்து | 62 |


❀❀❀

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் V

கர்மயோகி

**801) ஞான யோகத்திற்கு நிஷ்டை கருவியாவதுபோல், ஆன்மாவின் வளர்ச்சிக்கு ஆர்வம் கருவியாகிறது.**

*ஆன்மாவின் வளர்ச்சிக்கு ஆர்வம் கருவியாகிறது.*

❀❀❀

**802) வேலை செய்ய உடலில் சக்தியைச் சேகரம் செய்யவேண்டும் என்பதால், மனிதன் சோம்பேறி ஆகிறான்.**

*சக்தியற்றவன் சோம்பேறி.*

வேலை செய்யாதவனை நாம் சோம்பேறி என்கிறோம். வேலை செய்யச் செய்ய சக்தி அதிகமாக எழும். முதலிலேயே வேலை செய்ய ஓரளவு சக்தி வேண்டும். அது இல்லாதவனால் வேலையை ஆரம்பிக்க முடியாது.

❀❀❀

**803) கெட்ட பழக்கத்தில் தன்னையழிக்க மனிதன் பிரியப்படுகிறான். ஏனெனில் இது கட்டுப்பாட்டுக்கு எதிரானது. கட்டுப்பாட்டுக்கு சக்தியும், தெம்பும் சேகரிக்கப்பட வேண்டும்.**

*அழிவில் பெறும் ஆனந்தம்.*

ஆனந்தம் பெற காரியத்தைச் சாதிக்க வேண்டும். அதற்குத் தெம்பும், கட்டுப்பாடும் தேவை. தகப்பனார் சொத்து



வைத்துவிட்டுப் போனால், மகன் மேலும் சம்பாதிப்பது சுலபம். சுலபம் என்றாலும் முயற்சி வேண்டும், உழைக்க வேண்டும், கட்டுப்பாடு வேண்டும். தகப்பனார் சொத்தை விற்றுச் செலவு செய்வது சுலபம். இதனால் ஏற்படுவது நல்ல பழக்கமன்று. கெட்ட பழக்கங்களே உற்பத்தியாகும். கெட்ட பழக்கத்தால் தன்னையழிக்க மனிதன் பெரும்பாலும் பிரியப்படுகிறான்.

❀❀❀

**804) சொந்தமான சிந்தனைக்கு மனம் அளவுகடந்த சக்தியைச் சேகரம் செய்யவேண்டும். அது கடினம் என்பதால், நாலு பேர் சொல்வதைத் தன் அபிப்பிராயமாக மனிதன் ஏற்றுக்கொள்கிறான்.**

*நாலு பேர் சொல்வதை நானும் சொல்கிறேன்.*

சொந்தமாகச் சிந்தனை செய்ய அளவுகடந்த சக்தி மனதில் சேகரம் செய்யவேண்டும். அது பொதுவாக இருப்பதில்லை. கடினம். நாலு பேர் பேசுவதை நாம் ஏற்க அதுபோன்ற சக்தி தேவையில்லை என்பதால், அதையே தன் அபிப்பிராயமாகப் பலரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

❀❀❀

**805) தவத்தை நாடுபவர் குறைவு. இது ஆன்மீக சக்தியால் நடப்பது. மனிதனுடைய எல்லாச் சக்திகளையும் - மனம், உணர்வு, உடல் - சேகரம் செய்து மனத்திற்குமேல் குவிக்க வேண்டும் என்பதால் இதை நாடுபவர் அரிபொருள்.**

*பெரிய சக்தி தேவைப்படுவதால் சிறிய மனிதன் நாடாதது தவம்.*

உழைப்பாளியின் கருவி உடல். அவன் சக்தி உடலினின்று பிறக்கிறது. தலைவருடைய சக்தி உணர்விலிருந்து பிறக்கிறது.

அறிவாளியின் சக்தி மனதிலிருந்து பிறக்கிறது. தவத்திற்கு இந்த எந்த சக்தியும் நேரடியாகப் பயன்படாது. தவத்திற்குத் தேவைப்படுவது ஆன்மீக சக்தி. ஆன்மா விழித்து, அதன் சக்தியை எழுப்புதல் கடினம். அதனால் தவத்தை நாடுபவர் குறைவு.

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அன்னையின் தருணம், அகண்ட பிரபஞ்சத்தின் அளவில் வருகிறது. நாம் அதை உலகத்தினளவுக்குச் சுருக்கி விடுகிறோம். மேலும் முயன்று நம் அளவுக்கும் அதைச் சுருக்குவதே நம் வழி.

*அகண்டம் கண்டமாவது.*

## ஜீவிய மணி

துரோகம் ஆன்மீக விஸ்வாசம்.



# இம்மாதச் செய்தி

**கட்டுப்பாடு சிறந்தது; அதை விரும்பி ஏற்பது அதனினும் சிறந்தது.**

☆☆☆

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XII. Delight of Existence : The Solution

Page No. 102
Para No. 4

The world is still Maya.
It is so because it is not the essential Truth.
The essential Truth is of infinite existence.
It is only a creation of self-conscious Being.
It is not a creation in a void.
It is not a creation in nothing.
It is not out of nothing.
It is out of eternal Truth.
It is the eternal Truth of Self-being.
Its continent is the essential.
Its origin and substance are essential.
They are real Existence.
Its forms are mutable form of That.
It is a formation to its own conscious perception.
It is determined by its own force.
It is a creative conscious-force.
We may call it illusion.
It is our choice.
It may be the illusion of infinite consciousness.
Our mental sense of subjection can err.



## 12. ஆனந்தம் - விளக்கம்

உலகம் எப்படியானாலும் மாயை.
அடிப்படையான சத்தியமில்லாததால் அது மாயை.
அனந்தமான வாழ்வு அடிப்படை சத்தியம்.
உலகம் சத்-புருஷனுடைய சிருஷ்டி.
உலகம் சூன்யத்தில் உற்பத்தியாகவில்லை.
இல்லாதது இருப்பதை உற்பத்தி செய்யவில்லை.
இல்லை என்பது உலகை எழுப்பவில்லை.
உலகம் அழியாத சத்தியத்தினின்று எழுகிறது.
உலகம் சத்-புருஷனுடைய நிரந்தரச் சத்தியம்.
சாரம் அதன் உள்ளடக்கம்.
அதன் ஆதியும், பொருளும் சாரமானவை.
அதுவே உண்மை.
அதன் ரூபங்கள் பிரம்மத்தின் மாறும் ரூபங்கள்.
அது தன்னையறிவதன் சொந்த ரூபம்.
அது தன் சக்தியால் நிர்ணயிக்கப்படுகிறது.
அது சிருஷ்டித் திறனுள்ள தன்னையறியும் சக்தி.
நாம் இதை மாயை எனலாம்.
அது நம்மிஷ்டம்.
அது அனந்த ஜீவியத்தின் மாயையாக இருக்கலாம்.
மனம் கட்டுப்பட்டதால் தவறு வரலாம்.

It is incapable.
It may audaciously fling back a shadow.
It could be the shadow of our mental sense.
It may throw the shadow on something greater.
It is greater than Mind.
Therefore it is beyond subjection to falsehood and illusion.
We see the essence and substance.
They are of Existence.
It is not a lie.
Our consciousness is divided.
All errors and deformations are of our consciousness.
Still they represent some truth.
It is a truth of the indivisible existence.
It is self-conscious.
Our world is not the essential truth of That.
We can say that.
It is a phenomenal truth.
It is a truth of Its free multiplicity.
It is of the infinite superficial mutability.
It is not the truth of its Unity.
The Unity is fundamental and immutable.

Page No.102
Para No.5

On the other hand, we can take another look.
It is a look at world-existence.
Let us see it in relation to consciousness only.
It can be force of consciousness.
We realise it is a movement of Force.
The Force obeys some secret will.



அதற்கு முடியாது.
அது அனாவசியமாக ஒரு நிழலைத் தரலாம்.
அது மனத்தின் நிழலாக இருக்கலாம்.
தன்னைவிடப் பெரியதன் மீது நிழல் விழலாம்.
அது மனத்தைவிடப் பெரியது.
அதனால் அது மாயைக்கோ, பொய்க்கோ கட்டுப்படாது.
நாம் பொருளையும் சாரத்தையும் காண்கிறோம்.
அவை சத்.
அது பொய்யில்லை.
நமது ஜீவியம் கண்டம்.
தவறுகளும் குறைகளும் ஜீவியத்தவை.
இருப்பினும் அவை சத்தியத்தின் பிரதிநிதி.
அதுவே ஜீவாத்மாவின் சத்தியம்.
அது தன்னையறிந்தது.
உலகம் பிரம்ம சத்தியமன்று.
நாம் அதைக் கூறலாம்.
உலகம் தோற்றத்தின் சத்தியம்.
ஒன்று பலவாகும் தன்மையின் சத்தியம் அது.
மேலெழுந்தவாரியாக அனந்தமான கண்டங்களின் சத்தியம் அது.
அது ஐக்கியத்தின் சத்தியமன்று.
ஐக்கிய அடிப்படை, சலனமற்றது.

மாறாக, நாம் வேறு வகையாகப் பார்க்கலாம்.
அது உலகை நோக்கிய பார்வை.
ஜீவியத்தோடு மட்டும் பொருத்திப் பார்ப்போம்.
அது ஜீவிய சக்தியாக இருக்கலாம்.
சக்தியின் சலனத்தில் நாம் அதை அடையலாம்.
சக்தி இறைவனின் திருவுள்ளம்.

**Or it obeys some necessity.**
**It is imposed on it by the very existence.**
**It is the existence of consciousness.**
**The consciousness possesses and regards it.**
**It is then the play of Prakriti.**
**Prakriti is the executive Force.**
**It plays to satisfy Purusha.**
**It is a play regarding the Conscious-Being.**
**It enjoys the Conscious-Being.**
**It is a play of Purusha reflected.**
**It is a reflection in the movements of the Force.**
**Thus it identifies himself with it.**
**World is a play.**
**It is a play of the Mother of things.**
**Mother is moved to cast Herself into forms.**
**She does so forever into infinite forms.**
**It is an outpouring of experiences.**
**It is eternal.**

*Contd...*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பெற்றோரும் குழந்தைகளும் எதிரான அமைப்புள்ளவர்கள். ஆழ் மனதில் எதிரான உணர்வுள்ளவர்கள்.



**ஒரு சட்டத்தை சக்தி ஏற்கிறது.**
**வாழ்க்கை அதன்மீது சக்தியைத் திணிக்கிறது.**
**அது ஜீவியத்தின் ஜீவன்.**
**ஜீவியம் அதை ஆட்கொண்டு பயன்படுத்துகிறது.**
**அது பிரகிருதியின் லீலை.**
**பிரகிருதி உலகை இயக்கும் சக்தி.**
**புருஷ திருப்திக்கு அது செயல்படும்.**
**சத்-புருஷனுக்குரிய லீலை அது.**
**அது சத்-புருஷனை அனுபவிக்கிறது.**
**புருஷ லீலையின் பிரதிபலிப்பது.**
**சக்தியின் சலனம் பிரதிபலிப்பது அது.**
**அவ்விதம் புருஷன் அதனுடன் ஐக்கியமாகிறான்.**
**உலகம் நாடகம்.**
**பொருள்களின் தாயின் லீலை அது.**
**அன்னை தன்னை ரூபமாக வெளிப்படுத்துகிறார்.**
**எப்பொழுதும் அன்னை தம்மை அனந்த ரூபங்களில் காட்டுகிறார்.**
**அனுபவம் பீறிட்டெழுவதாகும் அது.**
**அது காலத்தைக் கடந்தது.**

*தொடரும்....*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

தானே மறைந்துகொள்வதை, சிறு சிக்கல்களில் காண முயல்வதே தன்னையறிதலின் முதற்படி.

*சிக்கல் சிறு சிருஷ்டி.*

## எங்கள் குடும்பம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

பெண் : இது அருள் செயல்படும் வகையா?

தாயார் : **இது அருள் வந்தபின் அகந்தை செயல்படும் வகை.**

பெண் : மிகைப்படுத்திக் கூற உதாரணம்.

தாயார் : வீட்டில் பையன் ஓடி ஒளிந்துகொள்கிறான். அவன் எறிந்த கல் குழந்தைமீது பட்டுப் பெரிய காயமாகி துரத்தி வருகிறார்கள். உன் பேச்சை அவர்கள் நம்புவார்கள் எனில் நீ தம்பியைக் காட்டிக்கொடுப்பாயா? பொய் சொல்வாயா?

பெண் : பெரிய ஆபத்தாயிற்றே. ஆபத்திற்குத் தோஷமில்லையே.

தாயார் : இங்கு ஒரு பெரிய யோக ரகசியம் உண்டு. நீ பொய் சொன்னால் உன்னைக் கடந்து அவனைப் பிடித்து விடுவார்கள். உண்மை சொல்ல முடிவு செய்தால் உன் உண்மை தம்பியைக் காப்பாற்றும். உண்மையின் சக்தியைத் தெரிந்தவரே இதைப் புரிந்துகொள்வார்.

பெண் : உதாரணம்.

தாயார் : இன்டர்வியூவில் தான் அனுப்பிய சர்ட்டிபிகேட் பொய் என்று கூறிய பையனுக்கு அட்மிஷன் கிடைத்தது.

பெண் : நம் வீட்டு விஷயத்தில் சொன்னால் புரியும்.

தாயார் : வரும்பொழுது சொல்கிறேன்.

பெண் : **மிகச்சிறிய விஷயம் மிகப்பெரிய விஷயத்தை நிர்ணயிக்கிறது.**



தாயார் : கார் வாங்கிப் பரிசு கொடுத்தவர் 3 நாள் உபயோகத்திற்குக் கார் கேட்டபொழுது கொடுக்க மனமில்லாமல் மறுத்தவனுக்கு அச்செயலால் எவ்வளவு பெரிய வாய்ப்பு - பிரபலம் பெறும் வாய்ப்பு - அதே நேரம் ரத்தானது கண்ணில் படவில்லை.

பெண் : அப்படியானால் தெரிவது முக்கியமில்லையா?

தாயார் : தெரியாமல் எதுவும் செய்ய முடியாது. தெரிந்தாலும் செய்வது முக்கியம்.

பெண் : செய்வது மனம் மாறுவதா?

தாயார் : ஆமாம். மனம் மாறினால், மாற முடிவு செய்துவிட்டால், பிறகு கண்ணில்படும், மனதில்படும். இல்லையேல் இல்லை.

பெண் : இதற்கு மேலும் உண்டா?

தாயார் : உண்டு. இதுவேதான், நமக்கு வரும் அதிர்ஷ்டமெல்லாம் ஆபத்தாக வரும் என்று அறியவேண்டும்.

பெண் : இதுவரை அப்படி நீங்கள் பேசியதில்லையே.

தாயார் : தடையெல்லாம் வாய்ப்பு.

பெண் : அதைச் சொல்கிறீர்களா?

தாயார் : தடையை வாய்ப்பாக அறிபவன் அன்னை பக்தன்.

பெண் : கேட்க பயமாயிருக்கு.

தாயார் : இந்த பாக்டரி வருமுன் அப்படி ஒரு விஷயம் நடந்தது. அப்பாவுக்கு அளவுகடந்த கோபம். என் தகப்பனார்மீது கோபம். காரணமேயில்லை. நான் இதைப் புரிந்து

கொண்டேன். நான் கோபப்படக்கூடாது என முடிவு செய்தேன். முடியவேயில்லை. ஒரு மாத மனப்போராட்டம் வென்றது. ஒரு நாள் அப்பாவுக்கு நடந்த உண்மை தானே தெரியவந்தது. நான் எடுத்துச் சொல்லி இருந்தால் ஏற்றிருக்கமாட்டார். இவருடைய அர்த்தமற்ற கோபத்தை என்னால் பொறுக்க முடியவில்லை. பொறுத்துக்கொள்ள முயன்றால் மேலும் மேலும் கோபத்தைக் கிளறுகிறார். நான் பேசிக்கொண்டே இருக்கிறேன், பதில் சொல்லமாட்டாயா? எனவும் கிளறுகிறார். 4 கட்டம் பொறுத்தேன். 5ஆம் கட்டம் பொறுக்க முடியவில்லை. அன்று விஷயத்தை வெளிப்படையாகப் பேசுவது என்று முடிவு செய்தேன். அன்று ஊருக்குப் போய்விட்டார். நான் அடுத்தாற்போல் படித்தவையெல்லாம் 'தடை சோதனை', 'Difficulties are opportunities', 'உள்ளே பார், உள்ளே மட்டும் பார்' என்றே வந்ததால் சற்று மனம் மாறினேன். ஊரிலிருந்து வரும்பொழுது பார்ட்னர் விஷயத்துடன் அப்பா வந்தார்.

பெண் : ஆச்சரியமாக இருக்கிறது. அப்பாவும் உங்களைப் போலிருந்தால் நல்லது.

தாயார் : பருத்தி புடவையாகக் காய்க்கும்.

பெண் : அப்பாவிடம் இப்பொழுது சொல்லக்கூடாதா?

தாயார் : நடந்ததும் கெட்டுப் போகும். **பிரச்சினை என்பது வாய்ப்பு என்பதை முதன்முறையாக அனுபவத்தால் நான் கண்டது இது.**

பெண் : இந்த நிகழ்ச்சிமூலம் பிரச்சினை எப்படி வாய்ப்பாகிறது என்று சொல்லம்மா.



தாயார் : பிரச்சினை என்பது மனம் கட்டுப்படாத உணர்ச்சி. கட்டுப்படுவதற்குப் போதுமான தெம்பு மனத்தில் இல்லை என்பது புறத்தில் பிரச்சினையாக உருவாகிறது.

பெண் : அகம் கட்டுப்படாவிட்டால் புறம் பிரச்சினை என்று கூறலாம்.

தாயார் : அதுவே சரி. கட்டுப்படாத அகம் கட்டுப்படுவது வெற்றி.

பெண் : அது அகத்தின் வெற்றி. அப்படியானால் அது புறத்தில் வாய்ப்பு.

தாயார் : எப்படி பிரச்சினை வாய்ப்பாக மாறுகிறது எனப் புரிகிறதா?

பெண் : சொல்வது புரிகிறது. மேலும் ஏதேனும் உண்டா?

தாயார் : **நம்மால் தீர்க்க முடியாத பிரச்சினை நமக்கு வாராது.**

பெண் : அது என்ன?

தாயார் : நம்மூரில் இல்லாத பொருளை நாம் அறிய முடியுமா? நாம் அறிவோம் என்றால் அது நம்மூரில் உள்ளது எனப் பொருள்.

பெண் : சரி, பிரச்சினை வந்துவிட்டது. நாம் தீர்க்கலாமா?

தாயார் : **தீர்க்கலாமா, வேண்டாமா என்பது choice**. வேண்டாம் என்பவன் வெறும் மனிதன். வந்த பிரச்சினையை அவசியம் தீர்க்கவேண்டும் என்பது அன்னை பக்தன்.

பெண் : தீர்த்தால் அது வாய்ப்பாகுமா?

தாயார் : என் மனக்குமுறலை நான் தீர்க்க முடியவில்லை. வெடிப்பது என முடிவு செய்தேன். நான்

தீர்க்காவிட்டாலும், அன்னை தீர்த்துவிட்டார். அது சூழலின் வலிமை.

பெண் : சூழலுக்கே அவ்வலிமையுண்டென்றால், நீங்களே அதை மனத்தில் தீர்த்திருந்தால்,

தாயார் : அது பெரியது.

பெண் : அன்னையைப் பற்றி அனைத்தையும் தெரிந்துகொள்ள ஆசையாக இருக்கிறது.

பெரியவனுடைய நண்பன் ஒருவன் வீட்டிற்கு வந்து சிலநாள் தங்கினான். மிகவும் நல்லவன். இவனுக்கு நெருங்கிய நண்பன். 'டேய்' எனக் கூப்பிட்டுக்கொள்வார்கள். பெரிய குடும்பத்துப் பையன். மிகவும் உயர்ந்த குடும்பத்துப் பையன். ஒரு நாள் இருவரும் தனியாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

நண்பன் : நான் உன்னிடம் சில விஷயங்களைப் பற்றிப் பேச சந்தர்ப்பம் எதிர்பார்த்தேன். அது இப்பொழுது கிடைத்துவிட்டது. இன்றும் அதெல்லாம் நான் எழுப்பமாட்டேன். உன்னுடைய புதிய பார்ட்னரைப் பற்றி நீ பேசியபிறகு நான் அவரைப் பார்த்தேன்.

பெரியவன் : நீ எங்கே அவரைப் பார்த்தாய்? பேசவில்லையே. ஒரு ஐந்து நிமிஷம்கூட பார்த்திருக்கமாட்டாயே.

நண்பன் : பார்த்தால் தெரியலியா? அவர் சொந்த ஊரைப் பற்றிச் சொன்னாய். நான் அந்த ஊருக்குப் போயிருக்கிறேன். நல்ல ஊர், நல்ல மனிதர்கள். நான் உரிமையோடு சொல்கிறேன். அதுவும் இந்த பாக்டரியில்லாவிட்டால், இந்தப் பிரச்சினையை எழுப்பமாட்டேன்.

பெரியவன் : நீ எது சொன்னாலும் எனக்குக் கோபம் வாராது. சொல், கேட்டுக்கொள்கிறேன்.



நண்பன் : இது உனக்குப் பெரிய வாய்ப்பு. மிகமிகப் பெரிய வாய்ப்பு. பார்ட்னர் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். **நீ உன் பழக்கங்களை மாற்றிக்கொள்ளுதல் அவசியம்.** இந்த பார்ட்னர்ஷிப் நீடிக்க அது அவசியம்.

பெரியவன் : நீ என்ன எங்க அம்மா மாதிரி பேசுகிறாய். ஏன் எல்லோரிடமும் நீ உன் adviceஐ சொல்லக்கூடாது? எல்லோருக்கும் தேவை என்று அம்மா சொல்கிறார்களே.

நண்பன் : நான் உன்னிடம் பேசுவதைப்போல் எல்லோர் எதிரேயும் பேசமுடியுமா?

பெரியவன் : அப்படி என்ன சொல்லப்போறே? திட்டப்போகிறாயா? **நீ திட்டினால் நான் குறையமாட்டேன். எல்லோர் எதிரேயும் திட்டேன்.**

நண்பன் : சுருக்கமா சொல்றேன். உன் பார்ட்னர் மாதிரி பேசக் கற்றுக்கொள் போதும். உன் சொந்தப் பழக்கம், பேச்சு எல்லாம் மூட்டைகட்டி வைத்துவிடு.

பெரியவன் : சொல்லு, கேட்டுக்கொள்கிறேன்.

நண்பன் : குறுக்கே பேசாதே. பார்ட்னர் எது சொன்னாலும் மறுத்துப் பேசாதே, உனக்குப் பெரிய வேலை செய்திருக்கிறார். அவர் பேசும்பொழுது மனதில் சந்தேகம் எழக்கூடாது. மனத்தில் சந்தேகமிருந்தால், ஒரு சமயம் வெளியே வந்துவிடும். அவர் சொல்வதே உண்மை என்று நம்பினால், சந்தேகம் எழாது. உனக்கு கிண்டல் பிடிக்கும். இனி அதை மறந்துவிடவேண்டும்.

பெரியவன் : என்னை அடியோடு மாறச் சொல்றே நீ.

நண்பன் : உன் பார்ட்னர் பெரிய குடும்பம். அவர்களைத் தெரியாதவர்களே அந்தப் பக்கம் எவருமில்லை. எப்படி

இது உனக்குக் கிடைத்தது எனத் தெரியவில்லை. விட்டுவிட்டால் தவறு, நீ மடையன். நீ பேசும்பொழுது சற்று நிதானித்து இந்தப் பதிலைச் சொன்னால், என்ன பதில் வரும் என யோசனை செய்து, அவர்கள் சந்தோஷப்படும்படிப் பேசக் கற்றுக்கொள்.

பெரியவன் : அடுத்த முறை நாம் சந்திக்கும்பொழுது எனக்கு மார்க் போடு, எவ்வளவு மாறியிருக்கிறேன் என்று. நீ சொல்வதை எல்லாம் அப்படியே செய்கிறேன். எனக்கென்னமோ நான் சரியாக இருப்பதாகப் படுகிறது. இருக்கட்டும், நீ சொல்றே. நான் மாறிக்கொள்கிறேன்.

நண்பன் போனபிறகு எல்லோரிடமும் அவன் சொல்லியதைப் பெரியவன் கூறினான்.

பெண் : அண்ணா, அதை அப்படியே எடுத்துக்கொள்.

தாயார் : இந்தப் பையன் எந்த ஊர்?

பெரியவன் : என் புரொபசர் ஊர்க்காரன்.

தாயார் : அது நல்ல ஊராயிற்றே. அதனால்தான் அப்படிப் பேசுகிறான்.

பெண் : நீங்கள் சொல்லியபடி நடப்பது ரங்கன்தான்.

பெரியவன் : ஆமாம், ரங்கன் நீங்கள் சொல்வதை எல்லாம் நுணுக்கமாகக் கேட்டுக்கொள்கிறான்.

பெண் : அவன் என்ன சாதிப்பான்? வீட்டு வேலை செய்பவனாச்சே.

தாயார் : உனக்குத் தெரியாது. அன்னை பின்னால் செயல்பட்டபடியிருப்பார். ஒரு நாள் அது பலிக்கும்.



பெண் : அப்படி என்ன பலிக்கும்?

தாயார் : இன்று உழைத்துப் பெறுவது, நாளை உழைக்காமல் வரும்.

பெண் : அது சௌகரியம், ஆனால் பெரிதல்ல.

பெரியவன் : நமக்குப் பார்ட்னர் வந்தபிறகு, நமக்கு மட்டும் உயர்வு வரவில்லை. ரங்கனுக்கும் வந்துவிட்டது.

தாயார் : எதுமூலம் வரும் என்று தெரியாது, வரும்.

பெண் : இன்று அவனுக்கு 900 ரூபாய் சம்பளம். இது உழைக்காமல் 9000 ரூபாய் ஆனால் அது அருள்.

பெரியவன் : ஏதோ அதுபோல் அவனுக்கு நடந்த மாதிரி தோன்றுகிறது.

பெண் : திருடமாட்டான்.

தாயார் : திருடுபவனுக்குத் திருட்டுமூலம் வரும், திருடாதவனுக்கு நல்ல முறையில் வரும்.

பெரியவன் : திருட்டுமூலம் வந்தால் அது சரியாகுமா?

தாயார் : அவனைக் கேளேன், ‘‘எது மூலமா வந்தால் எனக்கென்ன, வந்தால் சரிதான்’’ என்பான். அது நமக்குச் சரியில்லை. அவனுக்குச் சரி. அவனுக்குச் சரி என்றால், அன்னைக்கும் சரி.

பெண் : திருடு தவறில்லையா?

தாயார் : திருடுபவனுக்கு அது தொழிலாயிற்றே. அன்னை அவன் தொழில்மூலம் அவனிடம் செயல்படுகிறார்.

பெண் : அன்னைக்குத் திருடு சரியாகுமா?

தாயார் : நமக்குத் தொழில் சரி. அதனால் அன்னைக்கு யோகத்தைவிடத் தொழில் சரி என்றாகுமா? நமக்குரியது நமக்கு. அவரவர்கட்குரியது அவரவர்கட்குச் சரி.

பெண் : சரியாகப் புரியவில்லை, பிடிக்கவில்லை.

தாயார் : அன்னைக்குப் பிடிக்காததில்லை. திருடனையும் அவருக்குப் பிடிக்கும். அவனுக்காகத் திருட்டையும் பிடிக்கும். அதனால் அன்னை திருட்டை ஏற்கிறார் என்றாகாது.

பெண் : ரங்கன் திருடமாட்டான். அவனுக்கு என்ன வரும்?

தாயார் : அன்னைச் சட்டப்படி, அவனுக்கு நம்முடைய அந்தஸ்து வரும்.

பெண் : என்ன அநியாயம்?

தாயார் : நமக்கு பாக்டரி வருவது நியாயம், ரங்கனுக்கு நமது அந்தஸ்து வருவது அநியாயம்!

பெண் : அவனுக்கு வருமா?

பெரியவன் : வருபவரெல்லாம் நிறைய பணம் தருகிறார்கள். அது சம்பளத்தைவிட அதிகமாகவுமிருக்கலாம்.

தாயார் : அவனுக்கு நம்பிக்கையிருக்கிறது. அதிகமாகப் புரியும். கர்வம் அதிகம். கர்வம் அடக்கமானால் அவனுக்கு எதுவும் பலிக்கும்.

பெரியவன் : என்ன MLA, மந்திரியாவானா?

பெண் : எதிர்வீட்டிற்கு வரும் பாக்டரி பையன் MLA ஆனானே, அது போலவா?



தாயார் : வாழ்வில் வாராது, அன்னையிடம் வரும். நான் மீண்டும் மீண்டும் சொல்வது வாராதது வரும். காப்பாற்றுவது கடினம்.

பெண் : அதிலென்ன பிரயோஜனம். எப்படிக் காப்பாற்றுவது?

தாயார் : எந்த மனிதனுக்கும் வந்ததை எப்படிக் காப்பாற்றுவது எனக் கூற முடியும்.

பெரியவன் : யார் எடுத்துக்கொள்வார்?

பெண் : நான் எடுத்துக்கொள்கிறேன், சொல்லுங்க.

தாயார் : எரிச்சல் வாராமலிருப்பது கஷ்டம். அதுவே ஆரம்பம்.

பெண் : சரி, வரக்கூடாது என்றால் அடக்கிக்கொள்கிறேன்.

தாயார் : முடியுமா?

பெண் : அதுதான் சரியென்றால், முடியும்.

தாயார் : அப்படி நினைத்தால் முடியும், ஆனால் அது பெரிய காரியம். எரிச்சலைக் காட்டாமலிருக்கலாம், வாராமலிருக்காது.

பெண் : கஷ்டம்தான், அதுவே அன்னைக்குச் சரி என்றால் கொஞ்சம் கொஞ்சமாக வரும்.

தாயார் : சரணாகதியே சட்டம். அது முடியாதபொழுது அழைப்பு அவசியம். அதுவும் முடியாதபொழுது அமைதி வேண்டும்.

பெண் : அமைதியாக இருந்து, அழைப்பை மேற்கொண்டு, சரணாகதியை எட்டுவது அதிர்ஷ்டம் எனக் கூறலாமா?

தாயார் : இதை இடைவிடாமல் செய்தால் அதுதான் அதிர்ஷ்டம்.

பெரியவன் : பயித்தியம் பிடித்துவிடும்.

சிறியவன் : என்ன நான் வரும்பொழுது பயித்தியத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள்?

கணவர் : யாருக்குப் பயித்தியம்?

தாயார் : ரங்கனைப் பற்றிப் பேசுகிறோம்.

கணவர் : என்ன ரங்கன் MLA ஆயிட்டானா? மந்திரி ஆயிட்டானா?

பெண் : அம்மா, அப்பாவுக்கு நாம் பேசியது எப்படித் தெரியும்?

தாயார் : அப்போ, நாம் பேசியதில் ஜீவனிருக்கிறது எனப் பொருள்.

பெரியவன் : நான் ரங்கனிடம் போய் நீ மந்திரியாகப் போகிறாய் எனச் சொல்லவா?

பெண் : நீ அவனிடம் அப்படிச் சொன்னால், உன் வாய் முகூர்த்தம் அவன் மந்திரியாவான்.

பெரியவன் : அப்படியானால், அந்த பாவத்தை நான் செய்யமாட்டேன்.

சிறியவன் : உன்மூலமாக ரங்கனுக்குப் பெரியது வந்தால் அதன்மூலமாக உனக்குரிய பெரியது வரும்.

பெரியவன் : அப்போ, நான் போய் சொல்லட்டுமா?

எல்லோரும் சிரிக்கிறார்கள். பெரியவனின் சுயநலம், சின்ன புத்தி வெளிவருகிறது. பெண்ணுக்குத் தாயார்போல் விஷயம் புரிய ஆரம்பிக்கின்றது. கம்பனி வந்துவிட்டதால் கணவர் தம் வேலையை ராஜினாமா செய்ய நினைக்கிறார். ஆனால் தயங்குகிறார். பெண்ணுக்கு அன்னைமீது நம்பிக்கை வருகிறது. தாயாரிடம் சமர்ப்பணத்தைப் பற்றிக் கேட்கிறாள்.



பெண் : சமர்ப்பணம், சரணாகதி, என்ன வித்தியாசம்?

தாயார் : ஒன்று ஆரம்பம், அடுத்தது முடிவு.

பெண் : சமர்ப்பணம் செய்தால் எதுவும் கூடிவருமா? நான் என் தோழியின் அக்கா வாழ்வை சமர்ப்பணம் செய்யலாமா?

தாயார் : நம் சொந்தப் பிரச்சினைகளைச் சமர்ப்பணம் செய்யலாம். பிறர் பிரச்சினையில் அவர்கள் மனமும், போக்கும் கலந்திருக்கும். அது நமக்குப் பிடிபடாது.

அந்நேரம் பெண்ணின் தோழியும், அக்காவும் வருகிறார்கள். பெண்ணுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நினைத்தமாத்திரம் அவர்கள் வருவது புரியவில்லை. அக்கா ஊருக்குப் போவதைச் சொல்ல வந்தனர். அக்கா முகம் மலர்ந்திருந்தது. அவர் கணவரைப் பற்றிப் பேச முடியவில்லை. சமர்ப்பணம் செய்ய நினைத்தாள். “அவர் நடப்பதை நம்பமுடியவில்லை. வாழ்வு திரும்பிவிட்டது” என்றுமட்டும் கூறினாள். பெண்ணிற்கு அன்னைமீது நம்பிக்கை அதிகமாகிறது. அவர்கள் போனபின் பெண் ஏதாவது செய்யவேண்டும் எனத் தாயாரைக் கேட்டாள்.

தாயார் : நீ கேட்பது நல்லது. ஆரம்பத்தில் சிறிய விஷயங்களில் perfectஆக இருக்க முயன்றால் நல்லது.

பெண் : எதைச் சிறியது என்கிறீர்கள்?

தாயார் : நீ எப்பொழுதும் வெளியில் போனாலும், வந்தாலும் கேட்டைத் திறந்து போட்டுவிடுவாய். போன் பேசினால் மீண்டும் சரியாக வைப்பதில்லை. மேஜை அலங்கோலமாக இருக்கும். உன் அலமாரி ஒழுங்காக இருக்காது. இவையெல்லாம் சரியில்லாமல் சமர்ப்பணம் ஆரம்பிக்க முடியாது.

பெண் : இவையெல்லாம் எனக்குத் தெரியாதே.

தாயார் : அன்னை நம்மை unconscious என்கிறார்.

பெண் : நான் தோழியைப் பற்றிப் பேசினேன். உடனே அவள் வந்தது ஆச்சரியமாக இருக்கிறது.

தாயார் : அது சூழல், நாமில்லை.

பெண் : அதனால்தான் நானே சரியாக இருக்க ஆசைப்படுகிறேன்.

தாயார் : சமர்ப்பணம் செய்யவேண்டும் என்ற முடிவை எடுத்து பூரணமாக்கு.

பெண் : அந்த முடிவை, சமர்ப்பணம் செய்யலாமா?

தாயார் : அது செய்வது பெரிய விஷயம்.

பெண் : எதனால்?

தாயார் : சமர்ப்பணம் நினைவு வாராது. அந்த முடிவைச் சமர்ப்பணம் செய்ய ஆத்மா விழிப்பாக இருக்க வேண்டும்.

பெண் : நான் போய் நீங்கள் சொன்னவற்றையெல்லாம் செய்துவிட்டு வருகிறேன்.

கணவர் கம்பனியில் ஓராண்டு லீவு கேட்டதற்கு ஒத்துக்கொண்டதாக வந்து சொன்னார். அவர் முதலாளியுடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது சர்குலர் ஒன்று வந்தது. அதைப் படித்துவிட்டு முதலாளி சிரித்தார். ‘‘நீங்கள் ஓராண்டு லீவு கேட்கிறீர்கள். அதைக் கொடுக்க சட்டமில்லை. இதுவரைப் பழக்கமில்லை. நானே அதை உங்களுக்குக் கொடுக்க முடிவு செய்தேன். இந்த சர்க்குலர்படி இனி எவரும் ஓராண்டு லீவு பெறலாம் எனக் கூறுகிறது”. “நான் எதை முதலாளியின் தயவால் பெற்றேனோ, அதை சர்க்குலர் என் உரிமையாக்கிவிட்டது” என்று கூறி மகிழ்ந்தார். இவற்றையெல்லாம் கேட்ட பெண்ணிற்கு ஆர்வம் அதிகமாகி உள்ளே போய் 1 மணி நேரம் கழித்து வந்து, “நீங்கள் சொல்வதெல்லாம் அவ்வளவு சுலபமில்லை போலிருக்கிறதே. செய்ய ஆரம்பித்தால் எரிச்சல் வருகிறது. நான் வேலை செய்யும்பொழுது போன் வந்தது. பேசிவிட்டு வைத்தேன். அப்பொழுதுதான் நான் சரியாக வைக்கவில்லை எனக் கண்டேன். இது என்னால் முடியாதா?”



தாயார் : முடியாது என்பதில்லை. முயற்சியால் செய்யலாம். சமர்ப்பணத்தால் செய்யலாம்.

பெண் : நான் இரண்டையும் மேற்கொள்கிறேன்.

தாயார் : பெரியவன் வாய் முகூர்த்தம் ரங்கன் மந்திரியாவான் என்றவுடன் அவன் உஷாராகிவிட்டான், கவனித்தாயா?

பெண் : மனம் பொறுக்கவில்லை. எனக்கும் அப்படித்தான் இருந்தது.

தாயார் : வாயால் நல்ல வார்த்தை கேலியாகவும் சொல்ல முடியாத அளவு மனம் சுயநலமாக இருந்தால் அன்னை எப்படி உள்ளே வருவார்?

அப்பொழுது பெரியவன் வந்து ஆச்சரியமாக , “என்னம்மா, அன்னை மின்னல் வேகத்தில் செயல்படுகிறார்? நம் நகரில் ஒரு அரசியல் கூட்டம் போட்டார்கள். என்னை ஏரியா கமிட்டியில் போடுவார்கள் என நானும் போயிருந்தேன். அங்குப் பேசியவர்களில் நான்தான் சிறப்பாகப் பேசினேன். இன்றைய கூட்டத்திற்கு நானே தலைமை தாங்கினேன். என்ன ஆச்சரியம்! ரங்கன் அங்கிருந்தான். மந்திரி அவனுடன் சந்தோஷமாகப் பேசினார். போகும்பொழுது உடன் அழைத்துப் போனார். எனக்குப் பயமாக இருக்கிறது” என்றான்.

பெண் : ரங்கன் MLA ஆகணும் என்ற மனம் உனக்கு வேண்டும் என்று அன்னையை வேண்டிக்கொள்.

பெரியவன் : வாயால் மந்திரி எனவும் வரமாட்டேங்கிறது.

அப்பொழுது கணவர் வந்தார்.

கணவர் : நம்ம ரங்கன் ஒரு பெரிய வீட்டுப் பையன் போலிருக்கிறது. உள்ளூர் மந்திரிக்கு அந்த விஷயம் தெரிந்திருக்கு. அவனைக் கவனிக்கிறார். ஊர்பூரா அதுவே பேச்சு.

பெரியவன் : இந்திரா காந்தி டிரைவரை மந்திரியாக்கியது போலிருக்கிறது.

கணவர் : பார்ப்போம், என்ன நடக்கிறது என்று. அவசரப்பட வேண்டாம்.

தாயாரும், பெண்ணும் பிறகு ரங்கனுக்கு அதிர்ஷ்டம் வரவேண்டும் என்ற மனம் நமக்கெல்லாம் இல்லை. பயமாக இருக்கிறது. பொறாமையாக இருக்கிறது. வந்துவிட்டால் என்ன செய்வது என மனம் துணுக்குறுகிறது. இதுவே உண்மை. Good willக்கு ஏது இடம் எனப் பேசினர். ரங்கன் வந்தான். சந்தோஷமாக இருந்தான். நடந்ததை நடந்தபடிக் கூறினான். நமக்கு அவன்மீது முழு நல்லெண்ணம் இருப்பதாக நினைத்துப் பேசினான். அவனுக்கு நம்மீது நல்லபிப்பிராயம். எதுவும் நடக்கவில்லை. மந்திரி கவனித்தார், அதுதான்.

அம்மாவும் பெண்ணும் பேசுவதும், பெண்ணின் நடைமுறை மாறுவதையும் அனைவரும் கவனித்தனர். பெண் தன் முடிவைச் சமர்ப்பணம் செய்தாள். அது சமர்ப்பணமாயிற்று. மனம் மலைபோலக் கனத்தது. இன்பமாகக் கனத்தது. அண்ணன், தம்பி, அப்பா, மூவரும் அவளைத் தேடி வந்தனர். வெகு நேரம் அவளுடன் அமைதியாக, அன்பாக, நெருக்கமாக இருந்தனர். அனைவர் முகமும் மலர்ந்தன. வீடே மாறிற்று. உலகமே மாறியது போலிருந்தது. அப்படியே பெண் தூங்கிவிட்டாள். தூங்கி எழுந்தாள். போன் வந்தது. மந்திரி ரங்கனை



வரச் சொன்னாராம். அடுத்த போனில் பார்ட்னர் அப்பாவைக் கூப்பிட்டவர் பெண்ணுடன் நெடுநேரம் பிரியமாகப் பேசி போனை வைத்துவிட்டார். பெண் தாயாரிடம் வந்து இதுபோல் என்னிடம் பிரியமாக இதுவரை எவரும் பேசியதில்லை. பார்ட்னரும் அப்படிப் பேசியதில்லை என்றாள். தம் முடிவு சமர்ப்பணமானதால் பார்ட்னர் அப்படிப் பேசினார் என அவளுக்குத் தெரியவில்லை. ஏதோ பெரிய விஷயம் நடந்துவிட்டது என்று தாயாருக்குப் பெண் முகம் விளக்கியது. பெண்ணை விசாரித்து, சமர்ப்பணத்தைத் தாயார் அறிந்தார்.

பெண் : நான் உங்களைவிட்டுப் போய் கொஞ்சம் எழுதினேன். புது பால்பாயிண்ட் பேனா இங்க் வரவில்லை. கொஞ்சம் வருகிறது. நின்றுவிடுகிறது. உதறிப் பார்த்தேன். சில சமயம் இங்க் வரும், மற்ற நேரம் வாராது. எரிச்சல் படக்கூடாது என்ற முடிவை நினைவுபடுத்தி அலமாரியை அடுக்கிவிட்டு, மீண்டும் எழுத ஆரம்பித்தேன். பேனா நன்றாக எழுதியது.

தாயார் : அது சமர்ப்பணம் செய்வது. எந்தக் காரியமானாலும் அன்னைமூலம் மட்டுமே செய்வது என்பது பெரிய முடிவு. அதை நம்மால் செய்ய முடிவதில்லை.

தெருவில் ஒரே அமர்க்களம். ஓடிப்போய் பார்த்தனர். யாரோ குழந்தை வாயில் எதையோ போட்டுக்கொண்டது. தொண்டையில் மாட்டிக்கொண்டு திணறுகிறது. தாயாருக்கு அழுகை வருகிறது. கூட்டம் கூடிவிட்டது. அந்த வழி வந்த காரில் ஒரு டாக்டரிருந்தார். தாமே தம் ஹாஸ்பிடலில் அழைத்துப் போய்ப் பார்க்கிறேன் என்றார். அதுவே தெய்வச் செயல் என்று எல்லோரும் நினைத்தனர். பெண் உள்ளே ஓடி அன்னை படத்தின்முன் மண்டியிட்டு வணங்கி எழுந்து தியானத்தில் உட்கார்ந்து, "அம்மா, இந்தக் குழந்தையைக் காப்பாற்று" எனக் கதறினார். அக்குழந்தையும் அதன் தாயாரும் காரில் ஏறினர். உடனே குழந்தை திணறி சத்தம் போட்டதால் காரை எடுக்க முயன்ற டாக்டர் குழந்தையிடம் வந்தார். வாயிலிருந்தப் பொருளை குழந்தை

கக்கிவிட்டது. ஒரே ஆரவாரம். ஆரவாரம் கேட்டு பெண் பூஜை அறையிலிருந்து வெளிவந்து நடந்ததைக் கேட்டு ஆச்சரியப்பட்டாள். தாயாரிடம், "**அன்னை ஒருபொழுதும் தவறுவதேயில்லை**" என்று நெகிழ்ந்து கூறினாள். அவளுடைய பக்தி நம்பிக்கையாக மலர்ந்தது.

இனி அவள் பழைய மனுஷியில்லை. அவளுக்குப் புனர்ஜென்மம். தாயாருக்கு மட்டும் விஷயம் தெரியும். மற்றவர்கள் பெண் சந்தோஷமாக இருப்பதாக நினைத்தார்கள். அவள் மனம் வேலை செய்யவில்லை. ரங்கன் – பார்ட்னர் – மந்திரி – பேனா – சமர்ப்பணம் – தெருவில் குழந்தை – எல்லாம் நினைவுக்குப் பின்னணியில் இருக்கின்றன. எண்ணம் ஓடவில்லை. அன்னை முன்னணியில் இருக்கிறார். வாழ்வே Legend of Brahman. பிரம்மம் என்ற கதை போலிருக்கிறது. இனி **வேலை உள்ளேயிருப்பதையும், அது மிகக் கடினமானது என்பதும்** பெண்ணுக்குப் புரிந்தது. அம்மா மீது இதுவரை இல்லாத பாசம் எழுந்தது. அன்னை, நெஞ்சை நிரப்பியவர்கள், அதையும் கடந்து பரவுவதை ஆனந்தமாக உணர்ந்தாள். மனமும், உடலும் கனத்தன. பிற சமயங்களில் உடல் லேசாகிக் காற்றில் பறப்பது போன்றிருந்தது. என்ன என்று புரியவில்லை. கனப்பதும், லேசாக இருப்பதும் இன்பமான உணர்வுகள் என்பதுமட்டும் திட்டவட்டமாகப் புரிந்தது.

தாயாருக்குத் தம்பியிடமிருந்து மனைவிக்குக் கான்சர் என்று செய்தி வந்தது. தம்பி பதறினார். "இந்தச் செய்தியை நம்பாமல், மனத்தை அமைதிப்படுத்திக்கொண்டு புறப்பட்டு வா'' என அமைதியாகக் கூறினார். செய்தி அவரைப் பதட்டப்படச் செய்யவில்லை. தம்பி மனைவிமீது பாசம் இல்லாவிட்டாலும், செய்தியின் முடிவு அன்னை முடிவாக இருக்கப்போவது என்றாலும் பதட்டமிருக்காது என அவர் அறிவார். பிரார்த்தனை செய்ய முயன்றார். பிரார்த்திக்கும் அவசியமில்லை எனத் தோன்றியது. சமர்ப்பணம் செய்ய முயன்றார். சமர்ப்பணமாயிற்று. மேலும் அமைதியானார்.

அன்று மாலை தம்பி வந்தார். காலையில் பேசிய படபடப்பில்லை. ஆனால் அமைதியாக இல்லை.



தாயார் : தம்பி, நீ பயப்பட ஒன்றும் இல்லை. பூஜை அறைக்குப் போய், "நான் இந்தச் செய்தியை நம்ப விரும்பவில்லை" என முடிவு செய்து, முடிவைச் சமர்ப்பணம் செய்.

தம்பி சுமார் ஒரு மணிக்குமேல் தியானத்தில் லயித்துவிட்டார். அவர் எழுந்து வெளியில் வந்ததும் கணவர் அவருக்காகக் காத்திருக்கிறேன் என்று சொல்லி "உங்கள் மனைவியிடம் போனில் பேசினேன். அவர் ஒரு முக்கியச் சேதியை உங்களிடம் சொல்லச் சொன்னார். நீங்கள் ஒருவேளை அவர் சொன்ன செய்தியைத் தவறாகப் புரிந்துகொண்டீர்களோ எனச் சந்தேகம்" என்றார். தம்பி உடனே மனைவிக்குப் போன் செய்தார்.

தம்பி : என்ன தவறாகப் புரிந்துகொண்டேன்?

தம்பி மனைவி : ஒருவேளை எனக்குக் கான்சர் என நினைத்துக் கொண்டீர்களோ என எனக்குச் சந்தேகம்.

தம்பி : (ஆச்சரியமாக) உனக்கில்லையா?

தம்பி மனைவி : என்னுடன் வந்தவருக்கு, எனக்கில்லை.

தாயார் : என்ன சொல்கிறாள், உன் மனைவி?

தம்பி : கான்சர் அவளுக்கில்லை, அவளுடன் வந்தவருக்கு.

தம்பி, கணவர், தாயார், மூவரும் சந்தித்து நடந்ததை விவரமாகப் பேசி மகிழ்ந்தனர்.

கணவர் : ரொம்ப சந்தோஷம். வந்த ஆபத்து போய்விட்டது. Mother's Grace. நீ ஏதாவது செய்தாயா?

மனைவி : செய்தி வந்ததும் நான் அதை நம்பவில்லை. அதைச் சமர்ப்பணம் செய்தேன். சமர்ப்பணமாயிற்று. நான்

அமைதியானேன். தம்பியை நம்பவேண்டாம் என்றேன். சமர்ப்பணம் செய்யச் சொன்னேன்.

தம்பி : நான் தியானத்தில் உட்கார்ந்தவுடன் தியானமே என்னை ஆட்கொண்டது. எழுந்துவந்தேன். நீங்கள் இந்தச் செய்தியைச் சொன்னீர்கள்.

கணவர் : என்ன நடந்தது என எனக்கு விளக்கமாகக் கூறுவாயா?

இந்த நேரம் பேசாமலிருப்பது நல்லது எனத் தாயார் அறிவார். கணவருக்கு என்ன பதில் சொல்வது என்று யோசனை செய்தபொழுது, அவர் ஆபீஸ் நண்பர் வந்ததால் எழுந்து போய்விட்டார். அவரது தம்பி அவருக்கு நமஸ்காரம் செய்தார்.

தம்பி : மதர் காப்பாற்றினார். நீதான் எனக்கு மதர்.

கணவர் திரும்பிவந்து எனக்கு விவரமாகச் சொன்னால் நானும் சமர்ப்பணத்தை ஏற்பேன் என்றார்.

தாயார் : சமர்ப்பணம் பெரியது. பெரியவனுக்கு அவன் நண்பன் கூறியதை நாம் அனைவரும் கடைப்பிடித்தால் பின்னால் சமர்ப்பணம் செய்ய முடியும்.

கணவர் : சொல்லக்கூடாது என்று சட்டம் உண்டா?

தாயார் : உடனே பேசாமலிருப்பது நல்லது.

தம்பி : அதனால்தான் நான் விவரம் கேட்கவில்லை.

கணவர் : நான் கேட்கவில்லை.

சில வாரங்கள் வீடு சற்று ஆர்ப்பாட்டம் குறைவாக இருந்தது. பெரியவனுக்கு அவனுடைய நண்பன் கூறியதை அனைவரும் மனதில் ஓரளவு ஏற்றது போலிருந்தது அனைவருடைய போக்கும். பெண்



மீண்டும் தாயாருடன் அன்னையைப் பற்றிப் பேச ஆரம்பித்தாள். அவள் வரும்பொழுதெல்லாம் ஒரு பையன் உடன்வருவது வழக்கம். சிலசமயம் இரண்டு பேரும் வருவார்கள். ஒரேயொரு முறை கணவரும் வந்தார். அதுபோன்ற உரையாடல் ஒன்றில்,

பெண் : எனக்கு அன்னை நினைவாகவேயிருக்கிறது. என் நண்பர்கள் எல்லாம் நான் ஏதோ புது மேக்கப் செய்வதாக நினைக்கிறார்கள்.

கணவர் : முகம் பளிச்சென்றிருக்கிறது.

தாயார் : The Life Divine படித்தாலும், சமர்ப்பணம் செய்தாலும், அன்னை நினைவிருந்தாலும் முகம் இப்படியிருக்கும்.

சிறியவன் : அம்மா, இதெல்லாம் எப்படித் தெரியும் உங்களுக்கு?

பெரியவன் : அம்மா எப்பொழுதும் படிப்பார்கள். எத்தனைப் புத்தகம் படித்திருக்கிறார்கள்?

கணவர் : நீ படிக்கும் அன்னைப் புத்தகங்களைச் சொல்கிறாயா? நானும் படிக்கிறேன்.

தாயார் : என்னிடம் எல்லாப் புத்தகங்களும் இருக்கின்றன.

பெண் : ஏம்மா, எங்களை எல்லாம் படிக்கச் சொல்லவில்லை?

பெரியவன் : சொல்லியிருந்தால், நான் படித்திருக்கமாட்டேன்.

சிறியவன் : நான் இரண்டு பக்கம் படித்தேன். அப்புறம் மறந்துவிட்டேன்.

கணவர் படிக்க ஆரம்பித்தார். அவருக்கு மனம் புத்தகத்தில் இல்லை. பெண் தீவிரமாகப் புத்தங்களைப் படிப்பதும், தாயாருடன் அவற்றைப் பற்றிப் பேசுவதுமாக இருந்தாள். பிள்ளைகள் முன்போல இல்லை. ஆனால் அவர்கள் மனம் அன்னையிலோ, வேலையிலோ,

படிப்பிலோ, ஒழுங்கிலோ பதியவில்லை. ஒருநாள் பெரியவனும், சிறியவனும் பந்தயம் போட்டார்கள்.

பெரியவன்: உன் காலேஜிலே வாலிபால் டீம் பலமானது. மற்றதெல்லாம் சொத்தை.

சிறியவன் : ஒரு உதாரணம் சொல்லேன்.

பெரியவன்: பாட்மிட்டன் டீம் இந்த ஆண்டு முதல் ரவுண்டில் தோற்றுவிடும்.

சிறியவன் : இல்லை semi-finalsவரை வரும். நான் அன்னைக்குப் பிரார்த்தனை செய்கிறேன்.

பெரியவன்: பிரார்த்தனை செய்தால் விளையாட வேண்டாமா?

சிறியவன் : Semi-finals எங்கள் டீம் வந்தால் அதற்கப்புறம் என்னைக் கேலி செய்யமாட்டேன் என ஒத்துக்கொள்வாயா?

பெரியவன்: ஊம்.

சிறியவன் பைத்தியம் பிடித்ததுபோல் Mother, Mother என எந்த வேலை செய்தாலும் மனதால் சொல்ல ஆரம்பித்தான். டீம் முதல் ரவுண்டு ஜெயித்தது. அவன் டீமை மறந்தான். பந்தயத்தை முக்கியமாக நினைத்து அன்னையில் லயித்துப் போனான். டீம் semi-finals வந்து ஜெயித்தது. அண்ணனைத் தேடினான். அவன் ஊரிலில்லை. அன்னையில் கரைந்துபோக முடிவு செய்தான். Finalsஇல் டீம் ஜெயித்துவிட்டது. பந்தயம் ஜெயித்துவிட்டது. அண்ணன் வரவில்லை. மறுநாள் பெரியவன் வந்து சேர்ந்தான்.

சிறியவன் : நீ தோற்றாய்.

பெரியவன்: நானா, உன் டீமா?



சிறியவன் : என் டீம் semi-finals வந்துவிட்டது.

பெரியவன்: என்னைக் கேலி செய்கிறாயா? நான் உன்னை நம்பமாட்டேன்.

தன் நண்பன் ஒருவனுக்குப் போன் செய்து விசாரித்தான். டீம் finalsஇல் ஜெயித்துவிட்டது எனக் கேட்டு ஆச்சரியப்பட்டான். எப்படி என விசாரித்தான். First ரவுண்டில் எதிர் டீமில் சண்டை. அதனால் இவர்கள் ஜெயித்துவிட்டார்கள். இரண்டாம் ரவுண்டில் எதிர் கேப்டனுக்கு ஜுரம். செமி-பைனல்ஸில் காற்று இவர்கட்கு சௌகரியமாயிருந்தது. இத்தனை வெற்றியும் உற்சாகப்படுத்தியதால் பைனல்ஸில் ஆர்வமாக விளையாடி 2 பாயிண்டில் ஜெயித்துவிட்டனர் எனக் கேள்விப்பட்டான்.

தொடரும்....

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

வாழ்வின் ஒவ்வொரு நிலைக்கும் அதற்குரிய கட்டுப்பாடுகள், அனுபவிக்கக்கூடிய சந்தோஷங்களுண்டு. அனுபவிக்க வேண்டியதை அனுபவிக்காதது அறிவின்மை. எவருக்கும் அது பயன் தரப்போவதில்லை. அடுத்த உயர்ந்த நிலைக்குரிய கட்டுப்பாட்டை நினைத்து, தன் நிலையில் அவற்றை அறிவில்லாமல் பின்பற்ற முயலும் அறிவீனம் மனிதனுக்குண்டு. குழந்தை விளையாட வேண்டும். குடும்பஸ்தன் தான் அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவிக்க வேண்டும்.

*உரிய இன்பத்தை குறைவற ஏற்பது நல்லது.*

## Vol.11 Mother never asked HIM questions.
## Pg. 60 அன்னை பகவானிடம் கேள்வி என்று கேட்டதில்லை

கேட்டறியும் ஞானம் கேள்வி ஞானம். புறம் அகத்திற்கு புனிதமாக உணர்த்தும் ஞானம் அது. கேள்வி ஞானத்திற்குக் கேட்பது அவசியம். கேள்வி எழுந்தால் ஞானம் எழும். கண் பார்த்தால் கை செய்ய வேண்டும் என்ற வழக்கு கேள்விக்கு இடமில்லை என்று கூறுகிறது. புறம் தருவது புலனறிவு.

தியான் என்றொருவரை அன்னை பாரிசில் சந்தித்தார். தியான் என்றால் கடவுள், ஆண்டவன் எனப் பெயர். நம்மவர், ‘ஆண்டே’, ‘சாமி’, எனக் கூப்பிடுவது போன்ற சொல். அச்சொல்லையே தமக்கு இயற்பெயராகப் பூண்டவர். அது அவர் பெயரன்று. தம் பெயரை மாற்றியவர், தாம் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என எவரிடமும் கூறியதில்லை. ஓர் ஆங்கிலப் பெண்மணியைத் திருமணம் செய்துகொண்டார். தியானுக்கு சூட்சும அறிவு அதிகம். இறைவனின் சிருஷ்டியைக் காணும் திறன் பெற்றவர். அவர் உருவம் அன்னை தம் தியானத்தில் கண்ட கிருஷ்ணா என்ற உருவம் போலிருந்ததால், அன்னை அவரை நாடினார். அவர் மனைவி அன்னைக்களித்த புத்திமதி,

“குருவை ஒருபொழுதும் கேள்வி என்று கேட்கலாகாது”

என்பது. அன்னை அவருடன் அல்ஜீரியா சென்றார். சூட்சுமம் பயின்றார். உடலைவிட்டு உலகெங்கும் செல்லும் திறன் பெற்றார். வெளிவந்த உடலினின்று மீண்டும் வெளிவரவும் முயன்றார். அதுபோல் *12* முறை வரவும் பயின்றார். 12ஆம் முறை அதுபோல்



வந்தபின் தலைமீது சூரியனும், சூரியன்மீது சந்திரனும் உறையக் கண்டார். அவ்வாறு சூட்சும உலகங்களில் சஞ்சாரம் செய்தபொழுது பூமியின் ஞாபகம் உறையுமிடத்தை அடைந்தார். வாழ்வின் மந்திரம் சமஸ்கிருதத்தில் பொறிக்கப்பட்டதையும் கண்டார். சமஸ்கிருதம் தாமறியாதது என்றாலும் அன்னையால் அதை மனத்துள் வாங்கிப் பதிக்க முடிந்தது. அதைக் கண்ட தியான் அந்நிலையில் தமக்கு அம்மந்திரம் வேண்டும் என்றார். அதற்குள் அன்னைக்கு தியான் தாம் கண்ட கிருஷ்ணா இல்லை என்று தெரிந்தது. அத்துடன் அவர் மரணத்தின் தலைவன் எனவும் தெரிந்தது. மரணத்தின் தலைவன் வாழ்வின் மந்திரத்தைப் பெற்றால் வாழ்வு மரணத்தினின்று விடுபடும் வாய்ப்புப் போய்விடும் என அறிந்து மறுத்துவிட்டார். தியான் அன்னை சூட்சுமத்தினின்று திரும்பிவரும் மார்க்கத்தைத் துண்டித்துவிட்டார். இருப்பினும் அன்னை மறுப்பை மாற்றவில்லை. ஏனோ துண்டித்த மார்க்கம் துண்டிப்பை இழந்தது. அன்னை மீண்டும் உயிர் பெற்றெழுந்தார். பிற்காலத்தில் பகவானைச் சந்தித்தபொழுது அம்மந்திரத்தை அவரிடம் கொடுத்தார்.

- **குருவை கேள்வி கேட்கக் கூடாது.**
- **குரு, சிஷ்யன் இலட்சியத்தின் எதிரியானால், குருவின் பேச்சை சிஷ்யன் கேட்கக் கூடாது.**
- **எத்தனை மகத்துவம் வாய்ந்ததானாலும், சூட்சுமம் உலகை மாற்றப் பயன்படாது.**
- **உலகை மாற்ற சத்திய ஜீவியம் பயன்படும்.**
- **உலகில் எதிர்மறையானவையும் உண்மை.**

❀❀❀

## அன்பர் கடிதம்

அன்னை அன்பர்களே! அன்னையின் சக்தி அளவிட முடியாதது, அற்புதமானது, கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும் உற்சாக சக்தி! மனம் கசிந்து நினைத்த மாத்திரத்திலேயே 'மந்திரத்திற்குக் கட்டுண்டதைப்போல' அதிசயங்களை நிகழ்த்தும் பேரின்ப சக்தி ஸ்ரீ அரவிந்த அன்னையின் சக்தி!

மே மாதம் 11ஆம் தேதி என் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நான் இப்போது பகிர்ந்துகொள்ளப் போகிறேன். அன்று மதுரையிலிருந்து நாகர்கோவிலுக்குச் செல்லவேண்டிய அத்தியாவசியம். மதுரை ரயில்வே ஸ்டேஷனிலிருந்து திருமங்கலம் போனால் நாகர்கோவில் செல்லும் பஸ்ஸைப் பிடித்துவிடலாம் என்று நினைத்துப் போனோம், நானும், என் இரு குழந்தைகளும், உறவினர்களும். ஆனால் வெகு நேரமாகியும் பஸ் கிடைக்கவில்லை. அதன்பிறகு அங்கிருந்து மாட்டுத்தாவணி என்னுமிடத்திற்குப் போக பஸ் ஏறினோம் (அங்கிருந்துதான் நாகர்கோவில் செல்லும் பஸ் புறப்படுமாம்). பஸ்ஸில் அவ்வளவாய் கூட்டமில்லை. என் சின்னக் குழந்தையை (7 வயது) மடியில் தூங்க வைத்துவிட்டு சாய்ந்து உட்கார்ந்தேன். மழை மிகவும் பலமாய் பெய்யத் தொடங்கியது. அவசர அவசரமாய் பஸ்ஸின் சாளரத்தை அடைப்பதற்காக எழுந்தேன். அவ்வளவுதான் ஏதோ பெரும் புயலில் மரக்கிளை ஒன்று உடைந்ததைப்போல் 'மொடக்' என்று ஒரு சத்தம் என் வலது முட்டியில் கேட்டது. எனக்கு பகீர் என்றது. பகீர் என்கின்ற உணர்ச்சி என்னுள் ஊடுருவுமுன்பே நான் அன்னையை சரணடைந்துவிட்டேன். "அம்மா, நீங்க என்ன பண்ணுவீங்களோ, ஏது பண்ணுவீங்களோ, என் முட்டி எலும்பு முறியாமல் பார்த்துக்கொள்ளுங்கள்" என்கின்ற அன்பான வேண்டுகோளை அன்னையிடம் சமர்ப்பித்தேன். இடைவிடாமல் அன்னையை வேண்டி உடனுக்குடன் என் வாழ்வில் நடந்த



நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாய் எண்ணி எண்ணிப் பார்த்துக் கொண்டே எழுந்து நிற்க முயன்றேன், முடியவில்லை! முட்டியில் ஒரே வலி. என் உறவினர்களிடமும் எதுவும் சொல்லவில்லை. அன்னையிடம் மட்டும் என் நிலைமையைச் சொல்லிக்கொண்டே வந்தேன். மாட்டுத்தாவணி பஸ் ஸ்டாண்ட் வந்தது. இறங்கி என் குழந்தையின் கைப்பிடித்து மெதுவாய் நடந்தேன். இரண்டு, மூன்று அடிகூட எடுத்து வைத்திருக்கமாட்டேன், தடக்கென்று மழைத் தண்ணீரில் விழுந்துவிட்டேன். எழுந்து நிற்க முயன்றால் என் முட்டி காலியாகிவிட்டதைப்போல் ஒரு வெறுமை. விரும்பும் திசையில் கால்களைத் தூக்கி வைக்க முடியாததைப்போல் ஒரு செயல் இழந்த நிதர்சனம் என் வலக் காலுக்குக் கண நேரத்தில் நிகழ்ந்துவிட்டதைப் போல் ஒரு தளர்வு. என் மனம் தளரவில்லை. தளர்வை உடலுக்கு மட்டும் கொடுத்துவிட்டு மனமெங்கும் அன்னையை நிறைத்து வைத்தேன். மெதுவாய் என் குழந்தைகள், உறவினர்களின் கரம் பிடித்து நாகர்கோவில் செல்லும் பஸ்ஸிற்குள் ஏறி உட்கார்ந்தேன். மதுரையிலிருந்து நாகர்கோவிலுக்கு 5 மணி நேர பிரயாணம். காலை கொஞ்சம் நீட்டி இருக்கையில் சாய்ந்து உட்கார்ந்தேன். முட்டிக்குக் கீழ் கால் வீங்க வேறு ஆரம்பித்துவிட்டது. அன்னையை இடைவிடாமல் பிரார்த்தனை செய்ததால் எதையும் தாங்க முடியும் என்கின்ற ஆத்ம சக்தியை அன்னை எனக்குக் கொடுத்து விட்டார்கள். வலியோ, வலியினால் ஏற்பட்ட கஷ்டங்களோ, எதுவுமே என்னுள்ளே வரமுடியாமல் எனக்கு வெளியே நிற்பதைப்போல் ஒரு பிரமை. 5 மணி நேரப் பயணம் சிரமமில்லாமல் முடிந்தது. நாகர்கோவில் வந்து சேர்ந்தோம். ஆனால் பஸ்ஸிலிருந்து கீழே கால்களைத் தூக்கிவைக்க முடியவில்லை. மூளை நரம்புகளும், கால்களும் பெருஞ் சண்டையிட்டன. என்னால் அதை வேடிக்கைப் பார்க்கத்தான் முடிந்தது. அன்னையை வேண்டிக்கொண்டே எப்படியோ பெரு முயற்சியினால் ஆட்டோவில் ஏறி உட்கார்ந்தேன். இதில் என்ன அதிசயம் என்றால் என் கால்களில் 1 முட்டியில் நடக்கும் இவ்வளவு

போராட்டங்களையும் அன்னையைத் தவிர வேறு யாரிடமும் நான் பகிர்ந்துகொள்ளவில்லை. என் முட்டியின் வலியை என் முகத்தில்கூடப் பிரதிபலிக்காமல் அன்னையிடம் மட்டும் பிரதிபலித்தேன். எப்படியோ வீடு வந்துசேர்ந்தேன். கால் சுளுக்கிவிட்டது என்று மட்டும் வீட்டில் சொன்னேன். இரவு முழுக்க முட்டி வலித்தது. வலியுடனேயே அன்னை என்னைத் தூங்கவும் வைத்தார்கள்.

அடுத்த நாள் காலை என் அம்மா பக்கத்திலிருந்த ஒரு வர்மக்கலை தெரிந்த நபரை அழைத்து வந்தார்கள். அவர் என் முட்டியைப் பார்த்துவிட்டு அதிர்ஷ்டவசமாய், ஏதோ புண்ணியத்தினால் எலும்பு முறியாமல் தப்பித்திருக்கிறீர்கள் என்று சொல்லிவிட்டு காயத்திருமேனி எண்ணெய் வைத்துத் தடவி சுளுக்கெடுத்து, வெந்நீர் ஒத்தடம் கொடுத்து உலக்கையில் நடக்கவைத்து, மூன்று நாட்களுக்கு காலை, மாலை இரு வேளைகளிலும் தடவி சுளுக்கெடுத்தார். என் கால்கள் பெரியதாய் எந்தவிதமான பிரச்சனைகளுமில்லாமல் சரியாகிப்போனது உண்மை! உண்மை!

அன்னையை நினைத்தமாத்திரத்திலேயே என் கால் முட்டியில் கேட்ட மொடக், தடக் போன்ற முறிவான சப்தங்களையே நிசப்தங்களாக்கிவிட்ட அன்னை, 5 மணி நேரப் பிரயாணத்திலேயே கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து என்மீது கருணை காட்டிய அன்னையைப் பற்றி, ஒவ்வொரு நிமிடமும் அன்னையை நினைத்துக்கொண்டே வாழ்க்கைப் பயணத்தை நடத்தினால் இன்னும் என்னென்ன அற்புதங்களை அன்னை எனக்கு நடத்திக் காட்டுவார்களோ!! என் மனதில் எழும் எண்ணங்கள் அன்னையின் விஸ்வரூபத்தை என் மனக்கண்களுக்கு விரிய வைக்கிறது. அன்னை அன்பர்களே எந்தப் பிரச்சினைகள் வந்தாலும் சந்தேகத்தின் நிழல்கூட இல்லாமல் அன்னையைச் சரணடையுங்கள். அன்னை



பிரச்சினைகளைத் தீர்ப்பார்கள், உங்களுக்கு ஓர் ஆத்ம சக்தியைக் கொடுப்பார்கள்! நமக்கு வரும் கஷ்டங்கள் நாம் அன்னையைப் பற்றி அதிகப்படியாக அறிந்துகொள்ள நமக்கு வரும் சந்தர்ப்பங்கள்!

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**அழைப்பு:**

எந்த நேரமும் நாம் உச்சகட்ட உணர்வோடு செயல்படத் தேவையான அறிவும், உணர்வும், திறமையும், அவற்றின் சாரமும் உழைப்பின்மூலம் நாம் அன்னையிடமிருந்து பெறலாம்.

*உச்சகட்ட திறமைக்கான அறிவும், உணர்வும் தரும் அழைப்பு.*

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அன்னை தம் மீது நம்பிக்கையுள்ளவர் தாமுயரவேண்டி, அன்னையை அழைத்தால், அன்னை அவர்கள் நேரடியாக ஒரு செயலில் சத்தியஜீவியத்தை அடையும் வகை செய்கிறார். சில க்ஷணங்களேயாயினும், அன்னை அதைச் செயல்படுத்துகிறார்.

*முதற் ஸ்பர்சம் முழு அனுக்கிரஹம்.*

"அன்பர் உரை"

## காரிய சித்தி

*(கும்பகோணம் தியான மையத்தின் ஐந்தாமாண்டு விழாவில் 2.6.2002 அன்று திரு. P.V. சங்கர் நிகழ்த்திய உரை).*

வாழ்க்கைக்கு முக்கியமானவற்றுள் ஒன்று நாம் செய்வது கூடிவருவது. தேவை, கடமை, ஆசை என்பவை வாழ்க்கைக்குரியவை. தேவைகள் பூர்த்தியாகாமலிருந்தால் வாழ்வேயில்லை. கடமைகள் பூர்த்தியாகாவிட்டால் உயர்ந்த வாழ்வில்லை. இவையிரண்டையும்விட ஆசை பூர்த்தியாகவேண்டும் என்பதே மனிதனுக்கு முக்கியம். இவை மூன்றுக்கும் பொதுவானது செய்வது கூடிவருவது. சில நாடுகள் வசதியாக இருக்கின்றன. பல நாடுகள் வறுமையிலிருக்கின்றன. வசதியான நாட்டில் ஏழைகளும், வறுமையான இடங்களில் செல்வரும் உள்ளது, வசதி சூழ்நிலையை மட்டும் பொருத்ததில்லை என்று தெரிவிக்கிறது. வாழ்வில் வெற்றி, தோல்வியில் பொதுவான உண்மைகளும், குறிப்பான விதிகளும், இரண்டிற்கும் விலக்கானவையும் உண்டு. இவற்றையெல்லாம் அறிந்த சிலரில் வசதியானவர்கள், அது குறைந்தவர்களும் உண்டு. வெற்றி தனி மனிதனையும் பொருத்தது என்று நாம் தெரிந்துகொள்கிறோம். சூழலுக்கும், தனிமனிதச் சுபாவத்திற்கும், எல்லாக் காலத்திற்கும், எந்த இடத்திற்கும் பொதுவான உண்மையிருந்தால் அவற்றை நாம் அறியலாம்.

- **உள்ளும் புறமும் நிறைவானால் நிறைவான வெற்றி என்றும் நிச்சயம்.**
- **இவ்விரண்டும் குறையானால் வேலையை ஆரம்பிக்க முடியாது.**
- **புறம் நிறைந்து அகம் குறைவானால், சிறப்பாக ஆரம்பித்து குறையே நிலையாகும்.**



- **அகம் நிறைந்து புறம் குறையானால் ஆரம்பம் சிரமம், பூர்த்தியாவது நிச்சயம்.**

சரித்திரமும், இலக்கியமும், தத்துவமும் எல்லா நாட்டுப் பண்புகளும் இவற்றை அவர்கள் பாணியில் கூறுகின்றனர்.

- ❀ **அன்பர்கட்கு இதே சட்டங்களை அன்னை உயர்வாகப் பூர்த்தி செய்கிறார்.**
- ❀ **நம்பிக்கை அதிகமாக உள்ளவர்க்கு குறையை நிறைவாக மாற்றுகிறார் அன்னை.**
- ❀ **அன்னை அகம், நாம் புறம்.**

மேற்கூறியவை தவிர காரியம் என்பதற்கு ஆர்வம், சக்தி, உறுதி, திறமை, செயல்திறமை என்பவை தேவை. முடிவான பலனை நிர்ணயிப்பவை இவை. இவைகளும், அகத்தைப் பொருத்தும், புறத்தைப் பொருத்ததுமாகும். இவ்வளவும் உலகில் இயற்கை செயல்படும் நியதிக்குட்பட்டவை. அதுவும் ஆண்டவனின் அமைதிக்குக் கட்டுப்பட்டது. இதுவரை உலகம் அறிந்தது. ஸ்ரீ அரவிந்தம் கூறுவது புதியது, இன்றுவரை உலகம் அறியாதது. அதை, “இயற்கையில் இறைவன் வெளிப்பாடு” என்று பகவான் கூறுகிறார்.

- ✰ **காரிய சித்தியின் சட்டத்தை, கடைசிக் கட்டத்தில் அறிய முடியும்.**
- ✰ **அறிந்ததைச் செயல்படுத்த முடியும் என்பதை அன்பர்கள் அன்னையை அறிந்தவுடன் அன்னை நடத்திக்கொடுக்கிறார்.**
- ✰ **நமக்கு நடந்ததை நாம் முற்றிலும் அறிவது வாழ்வு முழுமை பெறுதலாகும்.**

இக்கட்டுரையில் காரிய சித்தி எனக் குறிப்பிடுவது ஒன்று. அது வேறு வகையாகவும் கருதப்படலாம். முதலில் கூறுவது அடிப்படை. இரண்டாவதாக அறியப்படுவது அனைவர் மனத்தையும் கவருவது.

- **எந்தக் காரியமானாலும் - சிறியது, பெரியது - எடுத்த காரியம் தவறாது முடிப்பது காரிய சித்தி என்பது முதல்.✱**
- **இரண்டாவது, காரிய சித்தியின் சூட்சுமம் அறிந்தவர், பெரிய காரியங்களைச் சாதிக்கலாம்.**

காரியம் என்பதற்குரிய அம்சங்கள் அடுக்கடுக்காய் *4, 5* நிலைகளில் உள்ளன. 1. செய்யவேண்டும் என்ற அக்கறை அல்லது ஆர்வம், 2. அதனால் எழும் சக்தியே energy காரியத்தை முடிக்கும் சக்தி, 3. இந்த சக்தி பல திசைகளிலும் சிதறிப்போகக் கூடியது. அதை நம் மன உறுதியால் ஒருமுகத்தினதாக்கினால் – ஒருமுகப்படுத்தப்பட்டால் – அது force சக்தியாகிறது. இது சக்தியை (energy) சிதறடிக்கவிடாது. Energy மாறி force ஆனாலும் forceக்குச் சாதிக்கும் திறனில்லை. புதுப்பணக்காரனுக்குப் பணம் வந்துவிட்டால் அதை எப்படிச் செலவு செய்வது எனத் தெரியாது. அதற்கு, செலவு செய்யும் திறமை வேண்டும். அதற்கு, செலவு செய்த அனுபவம் தேவை. Forceஐ நம் வாழ்வில் organise செய்தால் அது power ஆகும். Power நேரடியான பலன் தாராது. Skill செயல்பட்டால் power அதன்மூலம் results தரும். Results வந்தால் காரியம் சித்தியாயிற்று எனப் பொருள். இதை வேறு விதமாகக் கூறலாம்.

1. **மனிதன் எதையாவது சாதிக்க வேண்டும் என்றால் தெம்பு வரும். காரியத்தில் குறியாக இருந்தால் அதற்கேற்ப பெரிய காரியங்களைச் சாதிக்க முடியும்.**
2. **எந்த அளவுக்கு *energy* பெருகுகிறதோ அந்த அளவுக்குக் காரியம் பெரியதாக முடியும்.**
3. **கட்சியானாலும், கடையானாலும், எந்தக் காரியமானாலும் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இதை மட்டும் கவனித்தால், கவனிப்புக்கேற்ற பலன் உண்டு.**

**கவனம் அதிகமானால் பலன் அதிகம்.**



4. **கடை என்றால் அது முறையாக இருக்கவேண்டும், கட்சி எனில் நிர்வாகம் தேவை.**

**நிர்வாகம் சக்தியை power ஆக மாற்றும்.**

5. **எலக்ஷனில் ஜெயித்தபிறகு, கடை வியாபாரம் பெருகியபின் அதன் பலனைப் பெற *political skill, commercial skill,* பெற்றதைப் பலனாகப் பெறும் திறன் தேவை.**

இத்தனைக் கட்டங்களும் நம் வாழ்விலும், செயலிலும் உண்டு. இவற்றிற்கெல்லாம் கருவாக மேலே ✱ குறியிட்ட இடத்தில் நாம் ஒன்றைக் கூறினோம். அதுவே ரகஸ்யம், சூட்சுமம். எடுத்த காரியம் தவறாது முடிய 'நாம்' காரியத்திற்கு அடங்கி, காரியத்தை முடிக்கும் திறனுடையவர்களாக இருக்கவேண்டும். முதலில் நாம் காரியத்திற்கு அடங்கவேண்டும். அடக்கம் தேவை. இரண்டாவது காரியத்திற்குத் தேவையான அனைத்தும் (physical details) தவறாதிருக்க வேண்டும். மனத்தில் குறை என்பது காரியத்தைப் பொருத்தவரை கூடாது. மனம் நிறைவாக இருக்கவேண்டும்.

**அகமும் புறமும் நிறைந்திருக்க வேண்டும்.**

நாட்டு நிகழ்ச்சிகள், உலகில் பெரிய திருப்பங்கள், வரலாற்றிற்குரியவை ஆகிய இடங்களில் இந்த நிபந்தனை – அகமும் புறமும் நிறைவானால், பூரண வெற்றி என்பது – விலக்கின்றிச் செயல்படுவதைக் காணலாம்.

**இது விலக்கில்லாத விதி.**

இதேபோல் மற்ற 3 நிபந்தனைகளையும் விலக்கில்லாத விதி எனக் கூறலாம்.




வரலாற்று நிகழ்ச்சியொன்று, இலக்கியத்திலிருந்து ஒன்று, இன்று நடைமுறையில் நடந்தது மற்றொன்று என நாம் விதியைச் சோதனை செய்வது பலன்தரும்.

அவற்றை எல்லாம்விட நமக்குப் பூரண வெற்றி, பூரணத் தோல்வி, தோல்வியில் ஆரம்பித்து வெற்றியில் முடிந்தது, வெற்றியாக ஆரம்பித்துத் தோல்வியாக முடிந்தது ஆகியவற்றைக் கருதினால் நான்கு பகுதிகள் உள்ள இவ்விதி,

**விலக்கில்லாத விதி**

எனத் தெரியும். விலக்கு என்று கண்டால், விதி புரியவில்லை எனப் பொருள்.

BBCயில் வந்த T.V. serial சுமார் 15 ஆண்டுகட்குமுன் பிரபலமான Yes, Minister; Yes, Prime Minister என்பவை. சுமார் 20 (episodes) நிகழ்ச்சிகளாலானவை. Jim என்பவர் மந்திரியாகிறார். அவருக்குப் பெரிய திட்டங்களை அமுல்படுத்த ஆசை. புதிய பதவி என்பதால் அனுபவமில்லை. இலாக்கா, அதிகாரிகளால் நடத்தப்படுகிறது. அதிகாரிகள் நிரந்தரமானவர்கள். சராசரி ஒரு மந்திரி 11 மாத காலம் பதவி வகிப்பார். மந்திரி அனுபவம் பெறுமுன் அவர் பதவி முடிவுக்கு வந்துவிடும். இலாக்கா, சர்க்கார், பார்லிமெண்ட் நடைமுறைகள் ஏராளம், சிக்கல் வாய்ந்தவை. பொது வாழ்வு பத்திரிக்கை உலகத்திற்குக் கட்டுப்பட்டது. அரசியல்வாதிகளின் சொந்த வாழ்வில் மறைக்கக்கூடிய பிரச்சினைகளும், மறைக்க முடியாத பிரச்சினைகளும் உண்டு. எவரும் தம் குறைகளை அறிய முடியாது என்று ஒரு மந்திரி நினைக்கும்பொழுது C.I.D. அவரைப் பற்றிய தகவல்களை அனைத்தும் சேகரித்து உரிய அதிகாரியிடம் கொடுப்பதை அவர் அறிவதில்லை. மந்திரிகளுடைய குடும்பத்தார் மந்திரியாக நடந்துகொள்வதாலும், இளைஞர்கள் மந்திரிக்கு அடங்காமல் நடந்துகொள்வதாலும் ஏற்படும் பிரச்சினைகள் எவருக்கும் கட்டுப்பட்டவையல்ல. பிரிட்டிஷ் மந்திரி சபை என்பதால் உலகில் எங்கு, எது நடந்தாலும், அவர்கள் அதனால் பாதிக்கப்படுவர். எதிரான வல்லரசு ஒன்றிருப்பதால் அநியாயமாக நடக்கும் ஒரு நாட்டாரின் அர்த்தமற்ற கோரிக்கையை இயல்பாக நிராகரித்தால் எதிர்க்கட்சி வல்லரசு ஆதரவு தர முன்வரும்.



இதுபோன்ற ஏராளமான நிகழ்ச்சிகளும், இலாக்காக்கட்குள் உள்ள போட்டியால் எதையும் நேரடியாக செய்ய முடியாத நிலை. பத்திரிகைகள், T.V., போன்றவை மந்திரி பேசுவதை அவர்கள் அபிப்பிராயப்படி மாற்றி எழுதுவதால், மந்திரியாக வேலை செய்வது கடினம். அனுபவமற்ற மந்திரி அவசரமாக, ஆர்ப்பாட்டமாக செயல்படுவது அரசியல்வாதியின் பண்பு. இவற்றால் மந்திரிகள் நடைமுறையில் அதிகாரிகளை மீறிச் செயல்பட முடிவதில்லை. அதிகாரம் மந்திரியிடம், அனுபவம் அதிகாரிக்கு. அதனால் மந்திரி அதிகாரிக்குப் பணியும் நிலை நிரந்தரமாகிவிட்டது.

Jim என்பவர் திடீரென்று பிரதம மந்திரியாகிவிட்டார். மந்திரிக்கும், பிரதம மந்திரிக்கும் உள்ள தூரம் அதிகம். பிரதம மந்திரியான பின்னும் Jim தம் அதிகாரியின் கைக்குள்ளிருந்தார். அதிகாரம் அதிக அளவில் உயர்ந்தபொழுது, எச்சரிக்கையும் அதிக அளவில் தேவைப்படுகிறது. குறைந்தகால அனுபவத்தில் Jim அதிகாரியை தமக்கு அடக்கமாக்க விருப்பப்பட்டார். அது ஆபத்தான நிலை. சாண் ஏறினால் முழம் சறுக்குகிறது. Jim நிதானமாகச் செயல்படுகிறார். ஆனால் நிலைமை அவரை எப்பொழுதும் மீறுகிறது. சூழ்நிலையில் மேற்கூறிய அம்சங்கள் தவிர,

- ***இங்கிலாந்திற்கேயுரிய integrity நேர்மை அதிகாரிகளிடமும், அரசியல்வாதிகளிடமும் அபரிமிதமாக உள்ளது.***
- ***அரசியலுக்கேயுண்டான எல்லா அனர்த்தங்களும் நாட்டில் காணப்படுகிறது.***
- ***நேர்மை அரசியல்வாதிகளிடமும், அதிகாரிகளிடமும், பொது மக்களிடமும் அபரிமிதமாகக் காணப்பட்டாலும், விஷயத்தை மறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் அடிக்கடி எல்லா முக்கிய விஷயத்திலும் எழுந்தபடியிருக்கிறது.***
- ***இந்த சூழ்நிலையில் அனுபவமில்லாத அரசியல் தலைவர் அனுபவமுள்ள அதிகாரியின் பிடியிலிருந்து விடுபட எடுக்கும் முயற்சிகள் பகீரதப் பிரயத்தனம்.***

➽ *Jim* பெரிய அளவுக்கு வெற்றி பெற ஆரம்பித்து, முடிவில் முழு வெற்றியும் பெற்றதை இந்த *T.V.* நிகழ்ச்சிகள் தத்ருபமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. முன்னாள் பிரதமர் *Thatcher* இதைப் பார்த்துவிட்டு, "இது எனக்கு அமிர்தப்பிரவாகமாக இருந்தது, *gave me hours of pure joy*" என்கிறார்.

எந்த ஒரு நிகழ்ச்சியிலும் சுமார் 30, 40 decisions முடிவுகள் எடுக்கப்படுகின்றன. வெற்றி பெற்ற நிகழ்ச்சியானாலும், தோல்வியுற்ற நிகழ்ச்சியானாலும் இத்தனை நிகழ்ச்சிகளும் இந்த விதிப்படி நடந்தவை. விலக்கு என்பதேயில்லை. எத்தனை உயர்மட்ட அரசியலிலும், எவ்வளவு சிக்கலிருந்தபொழுதும், எதுவும் தெரியாத நிலையிலும், எதுவும் தெரிந்துகொள்ள முடியாத நிலையிலும் விதி, விதிப்படி செயல்படுகிறது. இந்த விதிகட்குட்பட்டு அன்னை செய்யும் அற்புதங்களும், இந்த விதிகளையும் அன்னை விதிக்கு உட்படுத்தும் ஆச்சரியத்தையும் அன்பர்கள் சொந்தக் காரியங்களை விமர்சனம் செய்வதால் அறியலாம்.

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அனுபவித்தல் அவசியம், விலக்க வேண்டிய அநியாய ஆசை என்பவற்றைப் பிரித்துப் பார்க்க அவை நம்மை நாடுகின்றனவா, நாம் அவற்றைத் தேடிப் போகிறோமா என்று பார்த்தால் தெரியும்.

- *நாடுபவை நல்லவை.*
- *தேடுதலை விலக்க வேண்டும்.*





## p.39 Bared with a stab of flame the closed Beyond.

**மூடிய உலகை நெருப்பின் பிழம்பெனும் கத்தியால் திறந்தான்**

- ✡ குரலை இழந்த சமாதியின் சிகரத்தில் விழித்தெழும் பார்வை.
- ✡ கற்பனையைக் கடந்த நிலையில் மனம் தொட்டிழுத்தது.
- ✡ ஆபத்தான தாண்டவம் ஒரே தாவலில் கடந்தது.
- ✡ உயர்ந்த கருந்திரை பரமனை மறைத்தது.
- ✡ உற்சாகமாகப் பேசி உள்ளே வந்தாள்.
- ✡ கடந்தவனின் கரை கடந்த பண்ணையைக் கொள்ளையடித்தாள்.
- ✡ அணுவெனும் சத்தியத் துளிகளைத் தேடி எடுப்பவள்.
- ✡ முடிவற்ற அனுபவத்தை எடுத்து முடிச்சுப் போடுபவள்.
- ✡ உலக அரங்கின் உயர்ந்த இரகஸ்யங்களை ஊடுருவினாள்.
- ✡ அவள் மந்திர மாயங்கள் ஆயிரம் திரைகளைக் கிழித்தெறிந்தன.
- ✡ இழந்த இரகஸ்யங்களைக் காலம் சுட்டிக்காட்டுவதைச் சட்டெனப் பிடித்தாள்.
- ✡ உயர்ந்து செல்லும் பாதையில் புழுதி எழும் புது உலகம்.
- ✡ அவசரப்படும் மனத்தின் கைவிடப்பட்ட கனவுகள்.
- ✡ கைவிடப்பட்ட காலம் - புதைக்கப்பட்ட நினைவுச் சின்னம்.
- ✡ தூரத்து இலட்சியம், பார்வையைக் கடந்த பாதாளம்.
- ✡ சொர்க்கமும், நரகமும் சொந்தமாக்கும் பாதைகள்.
- ✡ வேட்டை நாயென மோப்பம் பிடிக்கும் ஞானம்.
- ✡ விவேகியின் வீராவேசம் எழுதப்பட்டுப் பேசப்பட்டது.

✡ **மேலுலகச் சொற்பொழிவின் பளிச்சிடும் மணித்துளிகள்.**

✡ **சூட்சும மனத்தின் மூடிய கதவுகளைத் தாண்டிச் சென்றது.**

✡ **புதிரான சத்தியத்தின் புனித உடலை ஞானிக்கும், தீர்க்கதரிசிக்கும் தந்தது.**

ஜீவாத்மா உடலுள் புதைந்து, வாழ்வில் மறைந்து, மனத்திரையின் பின் உள்ளது.

ஜீவாத்மா எழுந்து வெளிவருவது பரிணாமம்.

அங்கு மனம் படும் பாடு, அதன் அவலங்கள், வாழ்வு எழுப்பும் பிரச்சினைகள் பல.

வாழ்வையும், மனத்தையும் மீறி வளரும் ஆன்மா வெளிவரும் பாங்கு பெரியது.

நம் வாழ்வில் நாம் செயலைக் காண்கிறோம்.

செயலின் அடிப்படையை நாம் காண்பதில்லை.

அடிப்படையுள் அமிழ்ந்துள்ள பிரம்மத்தையும் காண்பதில்லை.

கண்ணுக்கும், அறிவுக்கும் தெரியாதது ஆத்மா.

ஆத்மாவும் அசைவற்ற நிலையில் அறியாதது வளரும் ஆன்மா.

வளரும் ஆன்மா வாழ்வின் வளர்ச்சியன்று, மலர்ச்சி.

அதைக் கண்ணுற கண் புனிதப்பட்டுப் பூவாக மலர்தல் வேண்டும்.

❀❀❀





# இதுவோ உம் ரௌத்திரக் கருணை!

இல. சுந்தரி

பி.ஏ. பட்டம் பெற்றுவிட்டாள் உமா. அக்குடும்பத்தில் யாருக்குமே பெண் வாரிசு இல்லை. எனவே, தாத்தாவின் செல்லப் பெண்ணாய் வளர்ந்து பி.ஏ. பட்டம் பெற்றுவிட்டாள். மேற்கொண்டு ஆனர்ஸ் படிக்க ஆவல் இருந்தும் தாத்தாவின் மறைவிற்குப்பின் மேற்படிப்பு மறுக்கப்பட்டுவிட்டது. உயர் சிந்தனையாளர்களின் எழுத்துகளைப் படிக்கும் வாய்ப்பிருந்ததால் பத்தாம்பசலித்தனம் இல்லாத அபூர்வப் பெண்ணாய் தனக்குள்தானே வளர்ந்துவந்தாள். புறச் சூழல்களில் ஒரு சலிப்பிருந்தது. வீட்டில் திருமணப் பேச்செழுந்தது. துவண்டு போனாள் உமா. வாழ்வின் இலக்கு என்னவாக இருக்கும்? பெண்ணைப் பொருத்தவரை படிப்பிற்கு முக்கியத்துவம் எழாத காலமது. ஏதோ சிறிது படிப்பு, திருமணம், பிள்ளைப்பேறு, குடும்ப வாழ்வு என்று சுற்றிச்சுற்றி வருவதாக உணர்ந்தாள். உள்ளுக்குள் ஒருணர்வு, இல்லை, இது இல்லை என்று சதா மறுக்கிறது. பரமஹம்சர் சொல்வாரே நேதி, நேதி என்று அதைப்போல. அடிக்கடி போட்டுப் போட்டுச் சுழலவிட்டதால் கீரல்விழுந்த பிளேட்டுப்போல ஏதோ அபஸ்வரம் தட்டுவது போலுணர்கிறாள்.

ஒரு நாள், சமையறையில் அம்மாவிற்கு ஒத்தாசை செய்தவண்ணம் அம்மாவிடம் பேச்சுக் கொடுக்கிறாள்.

''ஏனம்மா? உனக்குத் திருமணமாகும்போது எத்தனை வயதிருக்கும்?'' என்றாள் உமா.

“எதற்காக கேட்கின்றாய்?” என்றாள் அம்மா.

“சும்மாத்தான். சொல்லேன்”, என்றாள்.

“எனக்குப் பதின்மூன்று வயதில் திருமணம்”, என்றாள் அம்மா.

‘‘பதின்மூன்று வயதில் உனக்கு என்ன தெரியும்? ஏன் அப்போதே திருமணம்’’ என்றாள் உமா.

“எனக்கெதற்குத் தெரியவேண்டும்? பெரியவர்கள் சொல்வதைக் கேட்டால் போதாதா?” என்றாள் அம்மா.

என்னவொரு கண்மூடித்தனம் இது? என்று உமாவின் உள்ளம் சலிப்படைந்தது. “நீயாகவே எதுவும் சிந்தித்தது இல்லையாம்மா? உனக்காக அபிப்பிராயங்களே கிடையாதா?” என்றாள் உமா மெதுவாக.

அவ்வளவுதான் அப்போது அங்கு வந்த அப்பா ருத்ரமூர்த்தியானார். இதற்குத்தான் பெண் அதிகம் படிக்கக்கூடாது என்று சொல்வது, பெரிய மேதை என்று மனதில் எண்ணமோ? என்றார் அப்பா.

உமா பேச்சை நிறுத்திவிட்டாள். தாத்தா இருந்திருந்தால் தனக்கு ஆதரவாய்ப் பேசியிருப்பார். அப்பாவிடம் பேச்சுவார்த்தைக்கே இடமில்லை.

என் வாழ்வின் இலக்குதான் என்ன? மனிதப் பிறவியின் உயர்நோக்கம் எதுவாக இருக்கும்? எங்கிருந்து வந்தோம்? எங்கு போகவேண்டும்? சிந்தனைகள் எழுந்தவாறு இருந்தன. யாரிடம் கேட்டாலும் நிறைவளிக்கும் பதில் இல்லை.

அம்மாவிடம் கேட்டாள் இதை. “யார் கண்டது? வந்துவிட்டோம். ஒரு நாள் போய்த்தான் ஆகவேண்டும்” என்று சர்வசாதாரணமாய்க் கூறினாள்.



எனக்கு மட்டும் ஏன் எதைக் கண்டாலும் நிறைவில்லை? மாலை நேரங்களில் இக்கேள்வி பூதாகரமாய் எழுந்து வேதனையளித்தது.

‘‘எப்பொழுது பார்த்தாலும் என்ன சிந்தனை? உலகில் உன்னையொத்தவர்கள் மகிழ்ச்சியாய் இருக்கவில்லையா?” என்றாள் அம்மா.

மாலைப் பொழுதாகிவிட்டால், மக்கள் உல்லாசமாய் கடற்கரைக்கும், பூங்காவிற்கும் புறப்படுகின்றனர். வண்ண விளக்குகள் சென்னையை சொர்க்கபுரியாய் மாற்றுகின்றன. போதாக்குறைக்குப் பேசும்படம் வேறு வந்துவிட்டது. மக்களுக்கென்ன? பொழுதுபோக்க வேண்டும், அலுப்புத் தீரவேண்டும், துன்பங்களை மறக்கவேண்டும்.

ஏன் தன்னால் மட்டும் இப்படியெல்லாம் இருக்க முடியவில்லை? எங்கிருந்து வந்தோம்? எங்குச் செல்லவேண்டும்? உண்பது, உடுப்பது, களிப்பது என்று முடிந்துவிட்டதா வாழ்க்கை? எதைச் செய்தாலும் ஏன் மனநிறைவில்லை? எதையோ உள்மனம் தேடுகிறது. எது கிடைத்தாலும் இதுவன்று, இதுவன்று என்கிறது. ஓயாத சிந்தனையால் அகப்பட்டபோது, அம்மா வந்தாள்.

‘‘எங்கெல்லாம் தேடுவது உன்னை? விளக்கு வைக்கும் நேரத்தில் இங்கே (மொட்டைமாடியில்) தனியே உட்கார்ந்து என்ன சிந்தனை? வா, கீழே போகலாம்” என்று கையைப் பற்றி அழைத்துப் போனாள் அம்மா. அம்மாவின் எளிய அன்பு புரியாமலில்லை. ஆனால் என்ன செய்ய, அம்மாவைப்போல் தன்னால் சிறுசிறு விஷயங்களில் எல்லாம் சந்தோஷப்பட முடியவில்லையே. தன் கவலை யாருக்கும் புரியாது. சின்னச் சின்ன ஆசைகளைச் சுமந்து திரியும் தோழிகள் அவளுக்கு ஒத்துவரவில்லை. அவளைப் புரிந்துகொண்டு, அவளுக்கு

இதமாய், 'நீ தேடுவது இதோ இங்கேயிருக்கிறது' என்று சொல்பவர் யாரேனும் உண்டா?

இப்படிப்பட்ட சூழலில்தான் ஒருநாள் இவள் தாய்மாமனும், மாமியும் புதுவையிலிருந்து வந்தார்கள். உமா அவர்கள் குடும்பத்தின் ஒரே பெண் வாரிசு என்பதால் எல்லோர்க்கும் அவள்மீது ஈடுபாடுண்டு. அதிலும் இவள் மாமன், மாமியர்க்குப் பிள்ளைப்பேறும் இல்லை. சிறு வயது முதலே மாமி அடிக்கடி இவளை அழைத்துப் போய்விடுவாள். விடுமுறை நாட்கள் என்றால் மாமன் மாமியுடன்தான் இருப்பாள். இப்போது மாமா புதுவைக்கு மாற்றலானபிறகு இன்னும் அவள் போகவில்லை.

மாமி, அவளைத் தன்னுடன் சில நாட்கள் வைத்துக் கொள்வதாய் அவள் தாயிடம் கேட்டாள். எப்போதும் அனுப்பிவிடும் அம்மா இப்போது தயங்கினாள்.

உமாவின் தாயும், மாமியும் சம வயதுக்காரர்கள். ஆதலால் பெயரிட்டு அழைத்துக்கொள்வது வழக்கம்.

''என்ன மைதிலி யோசிக்கிறாய். ஆசையாய்த்தானே கேட்கிறேன்'' என்றாள் மாமி.

"அதற்கில்லை கோமதி, இத்தனை நாட்கள் அவள் சிறு பெண்ணாயிருந்தாள். இனி திருமண வயதல்லவா?" என்றாள் அம்மா.

"அதனாலென்ன, வரன் வந்தது என்றால் உடனே அவளை இங்கே அழைத்து வந்துவிடுகிறேன். இல்லையென்றால் அங்கு நம் வீட்டில் பெண் பார்க்கும் நிகழ்ச்சி வைத்துக்கொள்வோம்'' என்றாள் மாமி.

இவள் அம்மா அதற்கு மறுப்புக் கூறுமுன், அப்பா அங்கு வந்தார். ''என்றிருந்தாலும் வேறு வீட்டிற்குப் பிரிந்து போகப்



போகிறவள்தானே, சிறிது நாட்கள் அவர்களுடன் இருந்துவிட்டு வரட்டும்'' என்றார்.

உமாவின் பிரார்த்தனை (திருமணத்திலிருந்து விடுபடுதல்) நிறைவேறியது. மாமன் மாமியுடன் புதுவை வந்தாள்.

சில தினங்களில், திடீரென ஒரு நாள் மாமியிடம், ''மாமி, என் ஆசையை நிறைவேற்றி வைப்பீர்களா?'' என்று உரிமையுடன் கேட்டாள்.

''நிச்சயம் நிறைவேற்றுவேன் உமா. மாமிக்கு உன் மகிழ்ச்சிதான் பெரிது. கேள், உனக்கென்ன ஆசை?'' என்று அவள் கூந்தலை வருடி அன்புடன் கேட்டாள்.

''மாமி! நான் பிரெஞ்சு கற்றுக்கொள்ளட்டுமா?'' என்று கேட்டாள் உமா.

''உன்னை அனுப்பவே அம்மா தயங்கினாள். இப்போது படிப்பதென்றால் பர்மிஷன் வாங்க வேண்டாமா?'' என்று தயங்கினாள் மாமி.

"இருக்கட்டும் மைதிலி, குழந்தையின் ஆசையை நாம் ஏன் தடுக்க வேண்டும்? கிளாஸ் ஒரு மணி நேரம்தான் இருக்கும்" என்று மாமா பரிந்து பேசியதுடன், அன்றே விபரம் அறிந்துவந்தார். "ஒரு தமிழர்தான் வகுப்பெடுக்கிறார். நாளைக்கே உமா போய்வரட்டும். நான்கிலிருந்து ஐந்து மணிவரையில்தான்'' என்றார் மாமா. முதல் விருப்பம் நிறைவேறியது.

முதல் வகுப்பே மிகச் சுவையாக அமைந்தது. இவள்தான் அன்று புதிதாக வகுப்பில் சேர்ந்ததால், மற்ற மாணவிகள் வகுப்பிற்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அறையில் நீண்ட பெஞ்சில் டெஸ்க்கின்மேல் நோட்டுப் புத்தகங்களுடன் உட்கார்ந்திருந்தனர். "உள்ளே போம்மா!'' என்று மாமா கொண்டுவிட்டுவிட்டுப் போனார்.

உள்ளே வந்தாள் உமா. அது பெண்கள் மட்டும் பயிலும் வகுப்பாகவிருந்தது. நான்கு பெஞ்சுகளில் அமர்ந்திருந்தனர்.

உமாவின் முதல் பார்வை ப்ரீத்தியின்மீதுதான் விழுந்தது. அத்தனைபேரும் ஆவலுடன் புதிய மாணவியின் வருகையைப் பார்த்துக்கொண்டிருந்த அதே வேளை, ப்ரீத்தி நகர்ந்து தன் பக்கத்தில் உமா அமரும்வண்ணம் இடம் விடவே, மகிழ்வுடன் அங்கு வந்தமர்ந்தாள் உமா. வகுப்பு முழுவதையும் அன்புடன் பார்த்த உமாவின் பார்வை, ப்ரீத்தியில் வந்து நிலைத்துவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். ப்ரீத்தியும் உமாவைக் கனிவுடன் பார்க்கிறாள். இவர்கள் இருவரின் நட்பு இவர்களை மையமாகக் கொள்ளாமல் ஓர் அற்புதப் பொருளில் மையம் கொண்டிருந்தது அவர்களே அறியாதவொன்று.

உமாவின் தவம் தொடங்கியது. ஒவ்வொரு நாளும் இவள் ப்ரீத்தியின் வருகைக்கு ஆவலுடன் காத்திருக்கிறாளே, ஏன்? அவள் கொண்டுவரும் இனிமைக்கே இவள் ஜீவன் காத்திருந்தது. ஒவ்வொரு நாளும் இவள் தன் இலக்கை நோக்கி ஓரடி வைப்பதாக உணர்கிறாள், மகிழ்கிறாள். அவள் அகத்தில் நுழைந்து பார்க்க முடிந்தால் அதை அறியவும் முடியும்.

அன்று உமாவிற்கு வகுப்பில் ஏனோ கவனமே செல்லவில்லை. வகுப்பில் ஆர்வமாகக் கவனிக்கும் இயல்பு, ஆசிரியர் வினாக்களுக்கு உடனுக்குடன் விடையளிப்பது என்று உற்சாகமான மாணவியான இவளிடம் ஆசிரியருக்குத் தனி ஈடுபாடு. ஆனால் அன்று இவள் எதிலும் ஒட்டாமலிருந்தாள். ஆசிரியர் தொடுத்த எளிய வினாவிற்குக்கூட ஆர்வமாக எழுந்து பதிலளிக்காமல் ஏதோ நினைவிலாழ்ந்த இவளை ஆசிரியர் வியப்புடன் பார்த்தார்.

‘‘என்ன உமா? என்னாயிற்று இன்று? பாடம் விளங்கவில்லையா?” என்றார்.



எழுந்து நின்றாள் உமா. ஒன்றும் பேசவில்லை. மற்ற மாணவிகள், ஏன் உமா? ப்ரீத்தி வரவில்லை என்று படிக்கப் பிடிக்கவில்லையா? என்று கேலி செய்தனர்.

அவர்கள் விளையாட்டாய்க் கூறியபோதும் உண்மையதுவே. இவர்கள் நினைப்பதுபோல் கேலி பேசி பொழுதுபோக்க அவள் ப்ரீத்தியை எதிர்நோக்கவில்லை. அவள் கொண்டுவரும் அற்புத அன்னை பற்றிய ஆன்மீகப் பரிசுகளுக்காக அவளை எதிர்பார்க்கிறாள். இது மற்றவர்களுக்குப் புரிய வாய்ப்பில்லை. இன்றுபோல் அக்காலங்களில் பாண்டிச்சேரி மக்கள் ஸ்ரீ அன்னையையோ, அவர் ஆன்மீக நிலைநாட்டலையோ புரிந்துகொண்டிருக்கவில்லை. தம் பெண்களை தம் அறியாமைப் பிடியில் வைத்து அடக்கி வாழ்ந்த காலம் அது. எனவே, பெரும்பாலானோர் ஆசிரமத்தின் அமைப்பையும், ஸ்ரீ அன்னையின் வரவையும் அதன் சாராம்சத்தால் புரிந்துகொண்டிருக்கவில்லை.

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தொடர்ந்து இடைவிடாமல் தீவிரமாகப் பிரார்த்திப்பது காலத்தின் கதியை நடைமுறையில் தவிர்க்க முயல்வதாகும்.

- *தீவிரப் பிரார்த்தனை காலத்தைக் கட்டுப்படுத்தும்.*
- *தீவிரமாகப் பிரார்த்திப்பது, காலத்தின் கதியை நடைமுறையில் தவிர்க்க முயல்வதாகும்.*

## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

தம்பி - நாம் செய்யாமல் எப்படிப் பிறரைச் செய்யச் சொல்ல முடியும்?

அண்ணன் - அது ஓர் அளவு சரிதான். செய்யவில்லை என எப்படிச் சொல்ல முடியும். நம் குடும்பத்தின் செல்வ நிலை எத்தனை மடங்கு உயர்ந்துள்ளது என்பதை மறுக்க முடியுமா?

தம்பி - இது பிறர் கண்ணில் படாது.

அண்ணன் - கண்ணில் படவேண்டுமானால் அதன் நிலை வேறு. யார் கண்ணில் படுகிறதோ இல்லையோ, அது பட வேண்டிய கண்ணில் பட்டுவிட்டது. நம் குரல் வாழ்வின் காதில் பட்டுவிட்டது. அது செயல்படுத்திவிட்டது.

தம்பி - உலகில் பணம் பெருகியுள்ளது. நம் நாட்டிலும் அதன் சாயல் தெரிகிறது.

அண்ணன் - பணப் பெருக்கத்தில் ஒரு விசேஷம் உண்டு. இனி பணம் தன்னைத்தானே பெருக்கிக்கொள்ளும் அளவுக்குப் பணம் பெருகியுள்ளது self-multiplying.

தம்பி - சென்ற ஆண்டு புது மத்திய சர்க்கார் ஏற்படும்பொழுது இருந்த தொழிலதிபர் என்னிடம் கூறினார், 'இனி எந்த சர்க்கார் வந்தாலும், வாராவிட்டாலும் தொழில் வளர்வதைத் தடுக்க முடியாது'.

அண்ணன் - தொழில் தன்னைத் தானே வளர்த்துக்கொள்ளும் (can self-multiply) என்ற நிலை வந்துவிட்டது என்று அவர் கருதினார். பணம் என்றால் உழைத்துச் சம்பாதிக்க வேண்டும் என்பது முதல் நிலை. பெரும் பணம் சேர்ந்தபின் தானே பணம் தன்னைப் பெருக்கிக் கொள்ள வல்லது எனத் தெரியும். பெரும் பணம் பெறும் வட்டி முதலை வளர்க்கும். அத்துடன் ஒரு புதிய அம்சமும் இப்பொழுதுள்ளது. விதையை நட்டு செடியாக வளர்த்துப் பாதுகாக்கிறோம். 2, 3 வருஷமானால் இனி அது தானே வளரும் என்கிறோம். அதுபோல் இதுவரை உலகில் பணம் என்றால் உழைப்பால் உற்பத்தி வருகிறது. பணம் என்பது நாட்டின் உற்பத்தித் திறன் என்றிருந்தது.

தம்பி - 200 மில்லியன் டன் தான்யம் உற்பத்தியாகிறது. தொழிற்சாலைகள் பொருள்களை உற்பத்தி செய்கின்றன. அதுவே பணம் என்று பொருளாதாரம் கூறுகிறது.

அண்ணன் - நீ சொல்வது பொருள்கள் goods. தச்சன், கருமான், ஆசிரியர், வக்கீல், டாக்டர், கடைப்பையன் போன்ற ஏராளமான பேர் பொருள்களை goods உற்பத்தி செய்யவில்லை. அவர்கள் உழைப்பு சேவையாகிறது services. பொருளாதாரம் goods & services பொருள்களையும், வேலையையும் பணம் என்கிறது. இன்று புதிய நிலை ஒன்று உற்பத்தியாகியுள்ளது. அது value பண்பு என்றுதான் கூற முடியும். அது சரியான சொல்லில்லை.

தம்பி - அது தெரியும். இப்பொழுது informationக்கு value வந்துள்ளது. நெடுநாளாக உள்ளது தானே இந்த value. Academic value, administrative value, work value, public value, social value, individual value, படிப்பு, நிர்வாகம், வேலை, பொது வாழ்வு, சமூகம், தனி மனிதன் ஆகியோர் பண்புதானே. இதற்கும் பண மதிப்பு உண்டா?

அண்ணன் - உண்டு. உண்டு என்பதுடன் ஒரு புதிய அம்சம் எழுந்துள்ளது. பணத்திற்குத் தன்னைத்தானே பெருக்கிக்கொள்ளும் புது அம்சம், value பண்பை பிரதிபலிக்கும் அம்சம் இரண்டும் இன்று சமூகத்தில் ஒரு புரட்சியை உருவாக்கியுள்ளன.

தம்பி - பொருள்கள் (goods), வேலை (services) பணத்தை உற்பத்தி செய்வதுபோல் value பண்பும் பணத்தை உற்பத்தி செய்யும் என்று எனக்கு ஓரளவு புரிகிறது. பிறருக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லத் தெரியாது.

அண்ணன் - எந்தத் தொழிலானாலும் நாணயம் (value) அதிகமாக இருந்தால் அதிகமாகச் சம்பாதிக்கிறார்கள். இந்த அதிக சம்பாத்தியம் நாணயம், பண்பு (value) ஆகியவற்றால் வருவது.

தம்பி - நாணயம் என்பது நாம் கூறும் value பண்பில் ஓர் அம்சம்தானே? திறமை, உண்மை (truthfulness), தொழில் நிர்ணயம் (professional integrity) என்பன போன்ற பண்புகள் ஏராளமாக உண்டல்லவா? ஒரு படிப்பு இருந்தால் சம்பாதிக்கிறோம். நாணயம் போன்றவை உடனிருந்தால் அதிகமாகச் சம்பாதிக்கலாம்.

அண்ணன் - முடிவில் இதை விளக்கலாம். இப்பொழுது சொல்வது சிரமம். பணம் தன்னைத் தானே இனி வளர்த்துக் கொள்ள முடியும் என்பதை விளக்கமாகக் கூறியபின் (value) பண்பே பணம் என்பது சற்றுப் புரியும். பண்பு மட்டும் பணமில்லை. அஸ்திவாரமிருந்தால் அதன் மீதுள்ள பண்பு பணம் என்பதைக் கூடியவரை கூற முயல்கிறேன்.

தம்பி - மரம் தானே வளரும் என்பதுபோல் கல்வி, போக்குவரத்து, மார்க்கட், மதம், மொழி ஆகியவைகளும் ஒரு கட்டம் தாண்டியபின் தானே வளரும் என்பதுதானே உண்மை.



அண்ணன் - அதுதான் உண்மை. அதை விவரமாகப் புரிந்து கொண்டால், நாம் பணத்தை நாமே பெருக்கலாம். அதைப் பிறர் ஏற்கும் வகையாகக் கூறுவது கஷ்டம்.

தம்பி - Infinity ஒன்று நூறாகப் பெருகுவது தாவர வாழ்விலும் காண்கிறோம். ஒரு விதை மரமாகி 100 பழம் தருகிறது. தொடர்ந்தும் தருகிறது.

அண்ணன் - நான் சொல்வதில் இதுவும் ஓர் அம்சம். பேச்சு என்பது இப்பொழுது நாம் அனைவரும் அறிந்தது. ஆயிரக்கணக்கான வருஷங்கட்குமுன் பேசுவது என்பது இன்று பணம் உள்ளதைப் போலிருந்தது. ஓர் ஊரில் 10 அல்லது 50 பேர் இருந்தார்கள். மற்றவர்கள் ஓரளவு பேசுவார்கள். போ, வா, சாப்பிடு, உட்காரு போன்ற 100 அல்லது 200 சொற்களுக்கு மேல் பேச முடியாதவர்கள் பெரும்பாலோர். இன்று பணம்போல அன்று பேச்சிருந்தது.

தம்பி - இன்றும் 100 வார்த்தைக்கு மேல் பேச முடியாதவர்கள் எங்கும் 50 அல்லது 200 பேருண்டு. அவர்கள் பொதுவாகத் தலையை மட்டும் ஆட்டுவார்கள்.

அண்ணன் - யாராவது அன்று, “இந்த 10 அல்லது 50 பேர்போல அனைவரும் ஒரு நாள் சரளமாகப் பேசுவார்கள்” என்று கூறியிருந்தால் எவரும் நம்பியிருக்க மாட்டார்கள்.

தம்பி - கார், போன், T.V., Ph.D., நோபல் பரிசு, போன்றவை சமூகத்தில் சிறுக ஆரம்பித்துப் பெருகியவைதானே.

அண்ணன் - பல பழக்கங்கள் கொஞ்ச நாளிருந்து அழிந்து விடுகின்றன. மற்றவை நாளாவட்டத்தில் வளர்கின்றன. சில வளர்ந்து பிறகு அழிகின்றன.

தம்பி - தெருக் கூத்து, வில்லுப்பாட்டு, போன்றவை நெடுநாள் இருந்து அழிந்தன. பெருங்கவிகள் இப்பொழுது உலகில் எங்கும் உற்பத்தியாவதில்லை. Tram டிராம் கொஞ்ச நாளிருந்து போய்விட்டது.

அண்ணன் - இந்த உதாரணங்கள் சில சரி வரும். எல்லாம் சரி வாரா. இனி அமெரிக்காவில் ஏழைமை வாராது. கல்வி எந்த நாட்டிலும் இனி வளருமே தவிர குறையாது. பஞ்சம் இந்தியாவில் 1943க்குப் பிறகு வரவில்லை. இனி உலகிலேயே பஞ்சம் வாராது என்கின்றனர். யுத்தமும் இனி வாராது என்கின்றனர்.

தம்பி - பணம்?

அண்ணன் - பணம் சில ஆயிரம் வருஷங்கட்கு முன் உலகில் வந்தது. முதலில் பல ரூபங்களாக (சங்கு, தோல்) வந்தது. பிறகு பவுன், வெள்ளி, நாணயமாயிற்று. இப்பொழுது நோட்டாக வழங்குகிறது. அதுவும் கிரெடிட் கார்ட் என மாறுகிறது. ரூபம் எதுவானாலும் உலகில் பணம் நிலைத்துவிட்டது என்று கூறலாம்.

தம்பி - அது சரி.

அண்ணன் - உழைத்து, வேலை செய்து பணத்தை இதுவரை ஈட்ட வேண்டும். இனி பணம் உலகில் தானே தன்னைப் பெருக்கிக்கொள்ளும்.

தம்பி - இது கடினமான கருத்து, எளிதில் ஏற்க முடியாது.

அண்ணன் - ஆதிநாட்களில் பொருளை (goods) உற்பத்தி செய்தோம். பணம் அதன்மூலம் வந்தது. பிறகு service வேலை செய்து பணம் ஈட்டினோம். சமீபகாலமாக நாணயம், பண்பு (value) பணம் ஈட்டுகிறது. நாணயமும், திறமையும் அதுபோன்ற (values) பண்புகள் இனி பணம் ஈட்டும்.

தம்பி - சிக்கலான கருத்து.



அண்ணன் - தத்துவமாகச் சொன்னால் சுலபம். நடைமுறைப்படி சொன்னால் சிக்கல். தத்துவத்தை நடைமுறை அனுபவம் அதிகமாக உள்ளவர்களிடம் கூறினால் எளிதாகப் புரியும். VISA card உற்பத்தி செய்த Dee Hock என்பவரே இக்கருத்தைத் தெரிவிக்கிறார்.

தம்பி - இப்படிச் சொல்லலாமா?

அன்று பணம் வேண்டும் என்றால் உழைக்க வேண்டும் - உழைப்பில்லாவிட்டால் பணமில்லை.

பிறகு சேவை - வேலை, service - செய்தாலும் பணம் சம்பாதிக்கலாம் என்றாயிற்று.

உழைப்பில் சேவை கலந்து வந்தது. அத்துடன் நாணயமுமிருந்தது.

உழைப்பும், சேவையும் சம்பாதித்ததுபோல், பிறகு நாணயமும், திறமையும் சம்பாதிக்க ஆரம்பித்தன.

அண்ணன் - நாணயம், வெறும் நாணயமாக இருந்தால் மட்டும் சம்பாதிக்க முடியாது. ஓரளவு உழைப்பு, சேவையுடன் கலந்து வரவேண்டும்.

தம்பி - இன்று நாணயம் சம்பாதிக்கும் திறமை அதிகமாகியுள்ளது.

அண்ணன் - அப்படிச் சொன்னால் சரிவரும்.

தம்பி - அதனால்தான் துறவிகளுக்கு ‘இருக்குமிடம் தேடி என் பசிக்கு அன்னம்’ வருகிறதா?

அண்ணன் - ரொம்ப சரி. துறவியின் ஆன்மீகப் பண்பிற்கு அன்னம் தேடிவரும். அப்படி வரும் எனில் அன்னம் மட்டும்தான் வரும்!

*தொடரும்.....*

**In our life, we find the world creates us.**
**In spiritual life, we create our world.**

- ☆ **பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்.**
- ☆ **ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.**
- ☆ **நாலு பேர் ஓடும்பொழுது நடுவில் ஓடவேண்டும்.**
- ☆ **ஊர் ஓடும்பொழுது ஒத்து ஓடவேண்டும்.**
- ☆ **ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.**
- ☆ **அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி.**
- ☆ **முன்னோர் போன வழி பின்னோர் போகும்.**
- ☆ **ஊருக்குப் பெரியவன் செய்தால் நான் என்ன செய்வேன்**

என்ற பழமொழிகள் தனி மனிதன் திறனற்றவன், ஊர் சக்திவாய்ந்தது என்பதைக் கூறுகிறது. பாரதத்தில் திரௌபதிக்கு நியாயம் வழங்க பீஷ்மரோ, துரோணரோ தயாராக இல்லை. 'செஞ்சோற்றுக் கடன்' என அடங்கினர் என்ற செய்தி போன்ற சரித்திர இலக்கியச் செய்திகள் ஆயிரம் மக்கள் மனநிலையைக் காட்டுகின்றன.

- ✳ **இவ்வளவும் உண்மை என்றாலும், உலகம் இவர்களால் இயங்கவில்லை என்பதைக், குறள், சான்றோரிருப்பதால் உலகம் இயங்குகிறது என்கிறது.**
- ✳ **இன்றுவரை உலகம் முன்னேறியது. புத்தர், சங்கரர், ஏசு, காந்திஜீ போன்று சமூகத்தினின்று விலகி புது வழி ஏற்படுத்தியவரால் முன்னேறியது என்பது தெளிவு.**



ஆன்மீக உண்மை இதைப் பற்றியது.

- ⇢ **புறம் தோற்றம், அகத்தின் வெளிப்பாடு.**
- ⇢ **அகத்தில் தோன்றி புறத்தில் செயல்படுவதால் ஏற்படுவது உலகம்.**
- ⇢ **அகத்தில் தோன்றாமல் புறத்தில் செயல்படுவதில்லை.**

இந்த ஆன்மீக உண்மையை அன்பர்கள் தங்கள் வாழ்வில் காணலாம்.

- ✡ **அன்னையை அறியும்வரை ஜாதகம் பலித்ததையும்,**
- ✡ **அன்னையிடம் வந்தபின் ஜாதகம் பலிக்காததையும்,**
- ✡ **அன்னையிடம் வந்தபின் நடப்பனவெல்லாம் ஏற்கனவே நாம் விரும்பி மறந்துபோன பழைய எண்ணங்கள் எனக் காணலாம்.**
- ✡ **ஜாதகத்திலில்லாத நம் ஆசைகள் ஆழ் மனத்திலிருந்தவை இன்று பலித்தன என்பது நாம் நம் உலகை சிருஷ்டிக்கின்றோம் என்பதாகும்.**
- ✡ **தங்கள் வாழ்விலும், பிறர் வாழ்விலும் இதை அன்பர்கள் காணலாம்.**

❀❀❀


**புதிய வெளியீடு**

# ரிஷிகள் கண்ட பிரம்மம்

***விலை : ரூ.150/-***

Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Postal Regn. No.TN/PMG(CCR)/114/03-05 Licensed to post without prepayment No.45/03-05

## அறிவிப்பு

**இவ்வட்டத்திற்குள் ◎ இக்குறி ✓ இருந்தால் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது. உடனடியாக புதுப்பிக்கவும்.**

## சொசைட்டியின் வெளியீடுகள்

ஆங்கில நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | Mental Peace of the Industrialist | ரூ. *30* |
| 2. | Sri Aravindam | ரூ. *40* |
| 3. | Luck | ரூ. *50* |
| 4. | Spirituality and Prosperity - I | ரூ.*100* |
| 5. | Life & Teachings of Sri Aurobindo and The Mother | ரூ.*120* |

மற்ற வெளியீடுகள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிலின் ஜீவன் | N. கண்ணன் | ரூ. 30 |
| 2. | தேடிவரும் யோகம் | பிரித்திவ் | ரூ. 50 |
| 3. | திருவருளே தீராத செல்வம் | N. அசோகன் | ரூ. 75 |
| 4. | திருவடி தரிசனம் | N. அசோகன் | ரூ. 75 |
| 5. | அருளோவியம் | N. அசோகன் | ரூ. 80 |
| 6. | பக்தியும் சேவையும் | N. அசோகன் | ரூ.100 |
| 7. | சத் பிரம்மம் | விசாலம் | ரூ. 20 |
| 8. | சத் புருஷன் | விஜயா & விசாலம்* | ரூ. 20 |

*சென்னையில் மட்டுமே கிடைக்கும்.

*தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து* M.O. *செய்யவும்.*

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# குள்ளச்சாமி

அன்பர் ஒருவருக்கு காலில் வெட்டுக்காயம் பட்டது. சற்று ஆழமானது. 5, 6 நாளில் காய்ந்துவிடும். காயம் சற்று ஆழமானதால், 8, 9 நாளானாலும் ஆகும். நல்ல மருந்து போட்டால் சீக்கிரமும் குணமாகும். காயம் ஏன் பட்டது என ஆராய்ச்சி செய்தால், அவருடைய மேலதிகாரி அன்று அவரை அநியாயமாக நடத்தினார். மனம் பொறுக்கவில்லை. பதைத்துவிட்டார். வீட்டுக்கு வந்தவுடன் காயம் பட்டது. மனத்தின் ஆவேசம் காயத்திற்குக் காரணம் என்று புரிந்தாலும், மனம் மேலும் ஆவேசப்படுகிறது. ஒரு பிளாஸ்திரி போட்டுவிட்டு மறுநாள் டாக்டரிடம் காண்பிக்கலாம் என நினைத்தார். வேண்டாம் தானே ஆறிவிடும் எனத் தோன்றியது. காயம் ஆறாமல் புரையோடினால் ஆபத்து. டாக்டரிடம் போகவேண்டும் என முடிவு செய்தார்.

மனம் காயத்தைவிட்டு அதிகாரி மேல் பாய்ந்தது. யாரோ டம்ளரைப் போட்ட சத்தம் கேட்டது. மனத்தின் ஆவேசம் காயம். மேலும் மனம் அடங்க மறுப்பதை டம்ளர் காட்டுகிறது என நினைத்தார். மனம் அடங்க வேண்டும் என்று நினைத்தால், கொந்தளிக்கிறது. தன்னுடன் வேலை செய்பவர் தவறு செய்தார். அவர் அதிகாரிக்கு வேண்டியவர். அத்தவற்றை தம்மீது ஏற்றிக் குறை கூறுகிறார். அதை அதிகாரி ஏற்றுத் தமக்குத் தண்டனை தருகிறார் என்பது மனத்தைக் கிலியாகப் பிடித்துக்கொண்டது.

“நம் அறிவுக்கு அதிகாரி தவறு செய்வது தெரிகிறது. அடிமனம் இதை நாடிப் போய் பெற்றுள்ளது என நாம் அறியவேண்டும்” என்பது அன்னையின் விளக்கமாகும் என்று புத்தி கூறியபொழுது மனம் சற்று அடங்கியது. “நம்மிடமில்லாதது நமக்கு வாராது” என்ற சட்டப்படி தம் செயலை ஆராய அவர் ஆரம்பித்தார். சில நாட்களுக்குமுன் பெரிய மகன் செய்த குற்றத்திற்காகச் சிறியவனை தாம் தண்டித்தது நினைவு வந்தவுடன், மனம் முழுவதும் அடங்கியது. சற்று வெட்கப்பட்டார்.

*Continued in the back cover........*

“இதுவரை அறிவில்லாமல் செயல்பட்டேன். இனியாவது அன்னை சொற்படி நடக்கலாம்” என மனம் கூறியது. அதன்படி மறுநாள் டாக்டரிடம் போவதா வேண்டாமா என முடிவு செய்யத் தெரியவில்லை. முடிவு தெரியவில்லை எனில் சமர்ப்பணம் செய்ய வேண்டும். அந்த எண்ணம் சமர்ப்பணமாக மறுத்தது. சமர்ப்பணம் செய்யும் அளவுக்கு நம்பிக்கையில்லை. நம்பிக்கையிருந்தால் காயம் தானே குணமாக வேண்டும். நாம் செய்யக்கூடியனவெல்லாம் தவறாமல் செய்யவேண்டும் என்ற அன்னைச் சட்டப்படி டாக்டரிடம் போகவேண்டும்.

குள்ளச்சாமியை நாய் கடித்தபொழுது அவருக்குப் பிளாஸ்திரி எடுத்துவரப் போன பையன் வருவதற்குள் அவர் காயம் மறைந்தது நினைவு வந்தது. அவர் சித்த புருஷர். அது எனக்கு நடக்குமா என்று நினைத்தார். அன்னையின் விரலில் எலும்பு நொறுங்கியபொழுது ஸ்ரீ அரவிந்தர் ஸ்பர்சம் சற்று நேரத்தில் நொறுங்கிய எலும்பைக் கூடவைத்தது. அவதாரப் புருஷருக்கு நடந்தது எனக்கு நடக்குமா என மனம் கேட்டபொழுது மின்சாரம் பெரியவருக்கும், சிறியவருக்கும் ஒரே சேவை செய்வதைப்போல் அன்னை சக்தி அனைவருக்கும் உண்டு என்ற விளக்கத்தை மனம் ஏற்க முடியவில்லை.

- **அதிகாரியின் அநியாயத்தின்பின் அன்னையின் நியாயமிருப்பது தெரிந்த அளவுக்கே எனக்கு அருள் உண்டு போலும். அதிகமாக ஆசைப்படக்கூடாது என மனத்தைத் தேற்றிக்கொண்டார்.**
- **குள்ளச்சாமிக்கும், அன்னைக்கும் கிடைத்த அருள் எனக்காகவும் காத்திருக்கிறது என்று அறிவு தெளிவாகக் கூறினாலும், உணர்வு ஏற்க மறுப்பதைக் கண்டார்.**
- **உணர்வு ஏற்காவிட்டால் சமர்ப்பணம் செய்ய முடியாது.**
- **இத்தனையும் சிந்தனையாயிற்றே. மனம் சிந்தித்தால் சமர்ப்பணம் செய்ய முடியாதே என நினைத்துக்கொண்டு தூங்கிவிட்டார்.**

மறுநாள் எழுந்தபிறகு காயம் நினைவு வரவில்லை. குளிக்கப் போகும்பொழுது காயம் நினைவு வந்தது. அதன்மீது தண்ணீர்ப் படாமலிருப்பது அவசியம் என்பதால் டாக்டரிடம் போகும்வரை பெரிய பிளாஸ்திரி போட விரும்பி காயத்தைக் கண்டார். காயம் முழுவதும் காய்ந்து போயிருந்தது!

★ ★ ★